SUPPLEMENT TO THE CATHCLIC GUARDIAN

1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"GUARDIAN"
JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 25-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு ஆனி மாசம் 30-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 20

## மகுடதாரண வெண்பொன் யூபிலி நினைவு மலர்


### வெண்பா

1. திங்கட் சரணமுறச் செங்கதிரோ னங்கமெய்தத்
துங்க வுடுமுடியாய்ச் சூடியே — சங்கைத்
திருமருத மாமடுவாழ் தேவதா யாரின்
இருசரணம் போற்றிடுவம் நாம்.

2. ஆண்டாண் டெழிலாடி ஆனதெதி யோரிரண்டில்
ஈண்டாண் டநவணைக்கு மெம்அனைவாழ் — தாண்டரிய
மாணுர் மருதமடு மாட்சிதரு காட்சியினைக்
காணுத கண்ணென்ன கண்!

1924

1949



மருதமடுத் தாயாரின் திருச்சுருபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருதமடு திருக்ஷேத்திரம்

# மருதமடுத் திருப்பதிச் சரிதம்

## சத்தியவேதம் ஆரம்பித்த விதம்

யாழ்ப்பாணத்தில் சங்கிலிஅரசன் செங்கோல் செலுத்திவந்த காலத்திலேயே (கி. பி. 1519—1561) மன்னூர்வாசிகள் சத்தோலிக்குசமயத்தின்மட்டில் சார்பு காண்பித்தார்கள்.

தென் இந்தியாவில் மலபார் கரையிலுள்ள சனங்களை அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் சத்தியவேதத்திற்கு மனந்திருப்பியசெய்தி மன்னூர்வாசிகளிடையே பரம்பியது.

இவர்களின் வாஞ்சையான வேண்டுதற்கிசைந்து, சத்தியமறையைப் போதிப்பதற்காக வண. பிரான்சீஸ்கு சேவியர்சுவாமியார் மன்னூருக்கு அனுப்பப்பட்டார். மன்னூர்ப்பிரதேசம் வேதவாக்கியத்தை விதைப்பதற்கு ஏற்ற செழிப்பான பூமியாக அவர் கண்டார். பிரான்சீஸ்கு சேவியர் சுவாமியாரால் வெகு சீக்கிரத்தில் மன்னூர் முழுவதும் சத்தியவேதத்தைத் தழுவிக்கொண்டது. புதிதாய்த் தோன்றிய வேதம், மன்னூரிலே மாத்திரமல்ல—அதன் சுற்றுக்கிராமங்களிலும் பரம்ப—மருதமடுமாதாவின் புராதன தலமாகிய மாந்தையும் புராதன கத்தோலிக்க கிராமமாய் மாறியது. போர்த்துக்கேயருடைய உதவியுடன் மாந்தைக் கிறீஸ்தவர்கள் செபமாலைமாதாவின் பேரால் ஒரு பெரிய கோவிலைக் கட்டினார்கள். மன்னூருக்கு அண்மையிலிருந்த பட்டிண் என்ற கிராமத்திலுள்ள அறுநூறு, எழுநூறு தொகையான, ஆண் பெண் பாலர்களை—சத்தியவேதத்தைத் தழுவியதற்காகச் சங்கிலிஇராசா வதைத்துக்கொன்றது மாத்திரமல்ல, வேதத்தைப் போதித்த வண. பிரான்சீஸ்கு சேவியர் சுவாமியாரையும் வாளுக்கு இரையாக்கினான். அதையறிந்து மாந்தைவாசிகள் தங்கள் மாதாகோவிலை மிகுந்த கவலையுடன்காவல்செய்துவந்தார்கள். சங்கிலியனின் இந்தக் கொடுங்கோன்மைக்காக இந்தியாவின் போர்த்துக்கேய தேசாதிபதியான தொம் கொன்ஸ்தந்தீன் தெ பிறகன்ஸா யாழ்ப்பாணக்குடாநாட்டில் பழிவாங்கினான். ஒல்லாந்தர் வருமளவும் எளிமை மிகுந்த மாந்தைக் கத்தோலிக்க மக்கள் செபமாலைமாதாவின் பாதுகாவலில் தங்கள் வேதத்தை அனுசரித்துவந்தார்கள்

## ஒல்லாந்தரின் அட்டூழியம்

1656-ம் ஆண்டளவில் போர்த்துக்கேயருடைய ஆட்சி இலங்கையில் முற்றாக அற்றுப்போக வேதவிரோதிகளான ஒல்லாந்தர்இங்கே (1656—1796) ஆதிக்கஞ்செலுத்தத் தொடங்கினர். அவர்கள் கத்தோலிக்க கோவில்களைத் தங்கள் துருப்புகளின் மண்டபங்கள், கிட்டங்கிகள் முதலியனவாக மாற்றியதையும் சத்தியவேத அனுசரணைகளைத் தடுக்க அவர்கள் எடுத்துவரும் முயற்சிகளையுமறிந்த மாந்தைக் கிறீஸ்தவர்கள் தங்கள் செபமாலைமாதா சுரூபத்தைப் பாதுகாப்பான வேறோரிடத்துக்குக் கொண்டுபோக வேணுமென்று கவலைகொள்ளலானார்கள். ஆனால் அவர்கள் மனந்தளர்ந்துபோயிருந்தார்கள். அவர்களுக்கு ஞானத்தைரியத்தையும் உற்சாகத்தையுமூட்டக் குருமார் இருக்கவில்லை. சத்துராதிகளின்கையிற் சுரூபம் அகப்படாமற் பாதுகாக்க கண்டியரசனின் இராச்சியம் வாய்ப்பாகஇருக்குமென்றெண்ணி ஊரவரின் சம்மதத்துடன் இருபது பத்தியுள்ளகுடும்பங்கள் சுரூபத்தை எடுத்துக்கொண்டு 1670-ல் கண்டிஇராச்சியத்துக்குப்புறப்பட்டார்கள்.

## மருதமடுவை அடைதல்

சத்துருவுக்குப் பயந்து அந்தச் சிறுகூட்டம் மாதாவின் பாதுகாவலில் அங்குமிங்குமாக வன்னிக்காட்டில் அலைந்துதிரிந்தது. இராமேசுரத்திலிருந்து கண்டிக்குப்போகும் இராசபாதையில் பழைய குளமொன்றிருந்தது. அதற்கண்மையிலிருந்த கிராமத்துக்குத் தெய்வாதீனமாக வந்துசேர்ந்தது அந்தக் கூட்டம். அந்தக் கிராமத்தின் பெயர் மருதமடு. அங்கே கண்டியரசனுக்குச் சொந்தமான திறைசேரியுமிருந்தது. அங்குவந்துசேர்ந்த மாந்தைக் கிறீஸ்தவர்கள் மாதாவுக்குத் தோத்திரம்பண்ணி, வேதத்தை அங்கு முதல்முறை நிலைநாட்டும் தினமாக அதனைச் செபத்தில் செலவழித்தார்கள்.

## யாழ்ப்பாணத்தில் வேதகலாபனை

யாழ்ப்பாணத்தில் வேதகலாபனை காட்டாக்கினிபோற் பரந்தது. மருதமடுவோ அமைதிநிறைந்திருந்தது. அங்குவந்துசேர்ந்த சொற்ப கத்தோலிக்கரின் குன்றாத விசுவாசமும் காந்தலான பத்தியும், மாதாவின்மனதை எவ்வளவாகக் குளிரப்பண்ணியதென்றால், அவவுடைய சலுகையினால் அவர்கள் சேமமே பாதுகாக்கப்பட்டார்கள். ஒல்லாந்தரின் கொடுவினையினின்று விலகிக்கொள்ளுவதற்காக 700 வேதக்காரர் ஏழு குருமாருடன் யாழ்ப்பாணக்குடாநாட்டைவிட்டு, தாய்நாட்டிலிருந்த பூநகரியைக் கடந்து வன்னிக்காட்டில் அடைக்கலம் புகுந்தார்கள். பயப்பிராந்திகொண்டவர்களாய்ப் பலவிடங்களிலும் அலைந்து திரிந்து அவர்களும் புதுமையாக மருதமடுவை அடைந்தார்கள். ஆ! என்ன ஆச்சரியம். அடர்ந்தகாட்டில் என்ன அதிசயமான சந்திப்பு. என்ன ஒருமனமான பயணம். வந்தவர்களும் மாதாவின் பாதநிழலில் மடுவையே தங்கள் அடைக்கலமாக்கிக்கொண்டார்கள்.

## சிலேனு மருதமடு

யாழ்ப்பாணத்திலிருந்துவந்த கிறீஸ்தவர்களுள் போர்த்துக்கேய தளகர்த்தனின் மகளான எலேனுவுமிருந்தாள். இவள் மிகுந்த பத்திவைராக்கியமுள்ளவள். இவள் காலகதியில் மடுவில் திறைசேரி உத்தியோகமாயிருந்தவனை மணந்துகொண்டாள். அவ்விடத்தில் மாதாவின் பேரால் முதற் கோவில்கட்டுவித்த பாக்கியமும் அவளுக்கே உரியது. அந்தத் தருமத்திற்காக அவளுடைய ஞாபகத்தை நிலைபரப்படுத்த எண்ணிய கிறீஸ்தவர்கள் மடுப்பதிக்கு இன்றும் வழங்கிவரும் பெயர்களுள் ஒன்றான "சிலேனுமருதமடு" என்ற புகழ்நாமத்தையுமிட்டார்கள்.

சிலேனு மருதமடுவில் கத்தோலிக்கரின்தொகை அதிகரித்திருந்தபோதிலும், மாதாவுக்குத் தோத்திரமாக வருடாந்த உற்சவமொன்றை நடத்த அவர்களுடைய வருவாய் இடங்கொடுக்கவில்லை. ஒல்லாந்தர், குருமாரை விரட்டித்திரிந்தபடியால் 30 வருடங்களாக (1656—1686) ஞானவிசாரணை செய்யக் குருமாரில்லாமல் கிறீஸ்தவர்கள் விடகவிடப்பட்டவர்களானார்கள்.

## கோவைக் குருமார்

ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் முனிவரும் அவருடையதியான சம்பிரதாயக் குருமாரும் இலங்கையில் வந்திறங்கியதிலிருந்து சத்தியவேதம் திரும்பவும் தழைக்கத் தொடங்கியது. குருமார்தொகை அதிகரிக்க இலங்கைத்தீவின் பலபாகங்களிலும் "மீசாம்"கள் தொடங்கப்பட்டன.

1695-ம் ஆண்டில் இலங்கைக்குவந்த பெத்று பெருவு சுவாமியார் மருதமடுவையும் மாதோட்டப்பகுதியிலுள்ள மந்தையையும் பராமரித்தார். 1706-ல் மாதோட்டக் கிராமங்களை இணைத்து சிலேனு மருதமடுவை மத்தியதானமாகக்கொண்ட ஒரு "மீசாம்" பெருவு சுவாமியாரின் மேற்பார்வையிலிருந்து வந்தது. தியானசம்பிரதாயக் குருமார் காலத்திலே மேற்சொன்ன சுவாமியார் மடுவிலே முதற்கோவிலைக் கட்ட, அவருக்குப்பின்வந்த வண. அந்தோனியோ தெ தவோறுசுவாமியார் அதைப் பெருப்பித்தும் திருத்தியும்வைத்தார். அவர் அதிக பலன் நிறைந்த பலவருஷங்களாக மிஷனறியாயிருந்து காலஞ்சென்றவர். "அவர் அநேக ஆண்டுகளும் பலன்களும் நிறைந்தவராய்த் தம்முடைய பிரயாசைக்கோர் ஞாபகசின்னமாகக் கட்டிய பலகோவில்களில் விசேஷமாக சிலேனு மடுக்கோவிலையும் கட்டிவிட்டு மரணத்திரையுள் மறையலானார்."

## ஆங்கிலேயர் காலம்

ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்ததும் வேதகலாபனை ஓய்ந்து இடையூறில்லாமல் வேதத்தை அனுசரிக்கக் கத்தோலிக்கருக்கு விடுதலை கிடைத்த ஓர் நவயுகம் உதயமாயிற்று. கோவைச் சுவாமிமாரின் மேற்பார்வையில் செழித்துவந்த மடுக்கோவிலுக்கு "நடு உழவில் நந்தை அறுந்தது"போன்ற இடையூறு நேர்ந்தது. 1834-ல் தியான சம்பிரதாயச் சபை குலைக்கப்பட்டது.

கோவைக்குருமார் காலத்தில் மன்னூரிலும் அதைச் சூழவர இருந்த இடங்களிலுமிருந்த கிறீஸ்தவர்கள் மருதமடுவுக்கு யாத்திரையாய்ச் சென்றார்களென்று காணக்கிடக்கிறது. மன்னூர் நீதிஸ்தலத்தில் அப்போது சக்கிடுத்தாராயிருந்த பறங்கியரான ஸ்ரீ மொயிஸ் என்பவர் கோயிலின் இடவசதியீனத்தைக்கண்டு விசுவாசிகளின் உபயோகத்துக்காக 1823-ல் மண்சுவர் எழுப்பி ஓர் குடிசைக் கோயிலைக் கட்டிவிட்டார். அக்குடிசைக்கோவில் 8 அடி உயரமுள்ள 3 சுவர்கள் உடையதாய்க் குதிரைலாடம்போன்ற வடிவத்தில் அரைகுறையாய்க் கட்டியிருந்தது. அதன்நடுவில் ஒரு மேசையிருந்தது. அது பலிபீடமாகப் பாவிக்கப்பட்டது. கோயிலின் பின்புறத்தில் குருமார் தங்குவதற்குச் சிறு அறை ஒன்றும் இருந்தது. "ஒல்லாந்தருடைய கோபாவேசத்தினின்று காக்கப்பட்டதும் மாந்தையிலே போர்த்துக்கீசருடைய கோயிலின் நடுநாயகமாய் விளங்கினதுமான அச்சுருபத்தின் இருப்பிடமாக மன்னூரைச் சேர்ந்தவரும் பத்தியுள்ள பறங்கியருமான ஸ்ரீ மோயிஸ் என்பவர் கட்டிய ஆலயம் அதுவே. பிற்காலம் பாரியவோர் கட்டிடமாக எழும்பவிருந்ததும் அகில இலங்கைக் கத்தோலிக்க சமூகத்திற்குப் பிரதானவோர் புண்ணிய க்ஷேத்திரமாக விளங்கவிருந்ததும் அந்த எட்டடி உயரமுள்ள மண்கோவிலே என்பது ஆச்சரியத்துக்குரியது. தேவசெயல்களெல்லாம் அதிசயமானவையன்றோ?

## பிரிவினைச் சபையாரின் வழக்கு

கோவைக் குருமார்சபை குலைக்கப்பட, றோமையிலுள்ள திருச்சபை அதிகாரிகள் இலங்கைத் திருச்சபைக்கு வேறு ஏற்பாடுகள் செய்தார்கள். பேற்றக்கினி ஆண்டவரின் தலைமையில் 1846-ல் வடபாக விக்காரியம் ஆக்கப்பட்டது. திருச்சபையைவிட்டுப் பிரிந்துபோன பிரிவினைச்சபையார் 1849-ல் மடுக்கோயிலுக்கு உரிமைபாராட்டத் தொடங்கியபடியால் யாழ்ப்பாணமேற்றிராசனத்திலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபைச் சுவாமிமாருக்கும் பிரிவினைச்சபையாருக்குமிடையில் 1851 தொடக்கம் வழக்கு நடந்துகொண்டிருந்தது. அக்காலத்தில் மடுவில் மீசாம்பார்த்துவந்த வண. ஜே.புசான் சுவாமியாரைப் பிரிவினைச்சபையாரிற் சிலர் அடித்து வெளியே துரத்தியபோதிலும் அவர் கோவிலைவிட்டகல மறுத்துவிட்டார். 1874-ம் ஆண்டு ஆவணி மாதம் 26-ந்திகதி பிரிவினைக்காரர் சார்பாக மன்னூர் நீதிஸ்தலம் தீர்ப்புச்சொல்ல அத்தீர்ப்புக்கு மாறாக மேற்றிராணியார் கொழும்புச் சுப்பிறீங் கோட்டுக்கு 'அப்பீல்' மனுப்பண்ணியிருந்தார். இருபத்திநான்கு வருடங்களாக வழக்கு நடந்தது. கடைசியாக யாழ்ப்பாண விக்கார் அப்போஸ்தொலிக்குவே அதற்கு உரிமைக்காரர் என்று 1875-ம் ஆண்டு ஆனிமாசம் 24-ந்திகதி சுப்பிறீங்கோடு தீர்த்தது.

## யாழ்ப்பாண மேற்றிராணிமார்

பெற்றக்கினி ஆண்டவருக்குப்பின்வந்த செமேரியா மேற்றிராணியார் கோயிலுக்கு அதிகந் திருத்தஞ்செய்ய முடியவில்லை. செமேரியா ஆண்டவருக்குப்பின் 1868-ல் பொஞ்ஜீன் ஆண்டவர் மேற்றிராணியாராய் வந்தபின் 1870-ல் மடுயாத்திரை தொடங்கியது. 1872-ல் புதுமேற்றிராணியார் மடுவிற்கு முதற்தரிசனை தந்தபோது அது இருந்த கேவலநிலையைக் கண்டார். மண்கோவிலைக்கண்டவேளை அவர்மனம் சோகம்கொண்டது. "இந்தப் பேர்போனதும் இழிகோலம் நிறைந்ததுமான புண்ணிய க்ஷேத்திரத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமடுமாதா மன்றாட்டுப் பதிகம்

(ஆசிரியர் K. T. ஞானப்பிரகாசம்)

**விருத்தம்**

1

ஆவலுடனே வந்திட்டோம்; ஆவிமூன்றுந் தந்திட்டோம்
பாவ விலங்கை யறுத்தருளும்; பண்ணும் பிழைகள் பொறுத்தருளும்
சீவ சலத்தை வார்த்தருளும்; சென்மதோஷம் தீர்த்தருளும்
கோவந் தவிர்த்தே மன்றாடும்; குலவும் மருத மடுத்தாயே!

2

பொல்லா வுடலைச் சுமந்திட்டோம்: பொய்யும் புரட்டும் அமைந்திட்டோம்
நில்லா வாழ்வை நேசித்தோம்; நிமலன் நாமந் தூசித்தோம்
செல்லா நெறியிற் சென்றிட்டோம்; தேவ ஞானங் கொன்றிட்டோம
எல்லாம் பொறுத்தே மன்றாடும்; எழில்சேர் மருத மடுத்தாயே!

3

நாரை யறியாக் குளமுண்டோ! நமனையறியா வுயிருண்டோ!
பேரை யறியாப் பிள்ளையுண்டோ! பிடித்தோம் உந்தன் அடிக்கமலம்
காரை யிழந்த பயிர்போலக் கருகி மடிந்தோம்; மன்றாடும்
மாரி யெனவே வரமருளும் மங்கா மருத மடுத்தாயே!

4

மோன பரனை மறந்திட்டோம்; மூவா வின்பந் துறந்திட்டோம்
ஞானப் பயிரின் குருத்தற்றோம்; 'நான்'என் றகந்தைக் கருத்துற்றோம்
ஈனச் செயல்கள் புரிந்திட்டோம்; ஏழைக்குதவா திருந்திட்டோம்
கானந்தனிலே காட்சிதரு கண்ணே! மணியே! மன்றாடும்

5

பாவிகளுக்காய் மன்றாடும்; பதிதர் தமக்காய் மன்றாடும்
கூவியழுதோம் மன்றாடும்; குடும்பந் தழைக்க மன்றாடும்
மேவி யடைந்தோம் மெய்ஞ்ஞான வெளிச்சங் காண மன்றாடும்
பூவி லனந்த புதுமைபொழி பொன்னே! மருத மடுத்தாயே!

6

பஞ்சம் படையி லாழ்ந்திட்டோம்; பாழும்நோயில் வீழ்ந்திட்டோம்
நெஞ்சம் புண்ணு யலைந்திட்டோம்; நீதி நேர்மை குலைந்திட்டோம்
அஞ்சு மடக்கி வழிநில்லோம்; ஆரிய குரவர் மொழிகல்லோம்
தஞ்சம் நீரே மன்றாடும்; தாங்கும் மருத மடுத்தாயே!

7

பாதம் பணிதல் மறந்திட்டோம்; பாவியாகப் பிறந்திட்டோம்
சூதும் வாதும் நினைந்திட்டோம்; சூழ்ந்து வஞ்சம் புனைந்திட்டோம்
மோதுஞ் சினத்தீ மூட்டிட்டோம்; மூத்தோர் வாய்க்குப் பூட்டிட்டோம்
போதுந் தாயே! மெய்ஞ்ஞானப் புதிரே தந்து மன்றாடும்.

8

கற்றும் அறிவுக் குறைவுற்றோம்; கன்னெஞ்சதனிற் கறையுற்றோம்
சற்றும் ஞான மணமில்லோம்; தாங்குந் தரும குணமில்லோம்
பற்றிப் பிசாசைப் பிடித்திட்டோம்; பாவவிஷத்தைக் குடித்திட்டோம்
முற்றும் நினது தயவம்மா! முன்வந் தெமக்காய் மன்றாடும்

9

போா னந்தம் பிரிந்திட்டோம்; பேயின் நட்பைத் தெரிந்திட்டோம்
ஏரா தெவையும் புரிந்திட்டோம்; இதயம் புண்ணாய் நெரிந்திட்டோம்
தீரா வினைகள் தீரம்மா! செங்கை யணைத்துக் காரம்மா!
ஆரா அமுதே! மடுத்தாயே! அபயம்! அபயம்! மன்றாடும்

10

தேடித் திரிந்தோம் பவமென்றும்; செய்தோ மல்லத் தவமொன்றும்
கோடிக் கணக்காய்ச் செய்தபிழை கொள்ளா தெம்மேற் பெய்துமழை
சூடித் துதிக்குஞ் சுதனைச் சுமந்தே தந்தாய்! நின்றுமனம்
வாடிக் களைத்தோம் மன்றாடும்; வன்ன மருத மடுத்தாயே!

# திருவங்கமாலை

பண் : சதாரி

தலையே! நீ வணங்காய்—தாளிற்
சந்திரனை யணிந்து
நிலையாய் மாமடு மீதுறை தாயாரைத்
தலையே நீ வணங்காய்!
கண்காள்! காண் மின்களோ—கரை
காணாச் சமுத்திரமாம்
பண்பார் தேவனை ஈன்ற பிராட்டியைக்
கண்காள் காண் மின்களோ!
செவிகாள்! கேண் மின்களோ—செப
மாலைத் திருத்தாயார்
புவிமீது செய்யற் புதந்தனை நாடொறுஞ்
செவிகாள் கேண் மின்களோ!
மூக்கே! நீ முகராய்—முது
கானுறை முன்னவளை
வாக்கால் யாவையு மாக்குப வன்தாயை
மூக்கே நீ முகராய்!
வாயே! வாழ்த்திடுவாய்—மடு
வாழும் மரியாளைச்
சேயோருக்கருள் செய்யுங் கிருபையை
வாயே வாழ்த்திடுவாய்!
நெஞ்சே! நீ நினையாய்—நிறை
நிர்மல உற்ப வியாம்
செஞ்சோதி யுடைத் தெய்வீக தாயினை
நெஞ்சே நீ நினையாய்!
கைகாள் கூப்பித் தொழீர்—கனல்
கால்வர்த்தி யேந்தி நின்று
மைவாய்ப் பாம்பின் படநசுக் கன்னையைக்
கைகாள் கூப்பித் தொழீர்
கால்க ளாற்பயனென் ?—கடல்
காடு கடந்து வந்து
மால்சேர் மருத மடுப்பதி சேராத
கால்களாற் பயனென்ன ?

[ அச்சுவேலி — தம்பிமுத்துப்புலவர் ]



அமலோற்பவசபை ஸ்தாபகர்
அதி ஆசாரமிக்க
இயூஜின் டெ மசனேட் O. M. I.
ஆண்டவர் அவர்கள்

## மானிப்பாய்
# அர்ச். அந்தோனியார் திருநாள்

சென்ற மூன்று ஆண்டுகளுக்குமுன் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் தமது ஜெனனவூராகிய மானிப்பாயில் நவமாய் அடியிடப்பட்ட அர்ச். அந்தோனியாரின் ஆலயத்தில், இம்முறை கோடியற்புதரின் திருநாள் வெகு ஆடம்பர பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. திருநாளைக்கு முந்திய தினங்களில் மாலைஆராதனைகள் நடத்தப்பட்டன. திருநாளுக்காக, ஆலயமும் சுற்றுப்புறமும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கோவில் முன்றிலில் அலங்காரபீடம் அமைக்கப்பட்டிருந்தது. மின்சாரவெளிச்சமும் இணைக்கப்பட்டிருந்தது. 19-ந்திகதி சனிவாரம் சாயந்தரம் பன்னூற்றுக்கணக்கான விசுவாசிகளும் சைவநண்பர்களும்கூடி நின்றார்கள்.

அத்தருணம் எமது வந்தனைக்குரிய அருளப்ப கியோமார் ஆண்டவர்அவர்கள் கோவில்வாசலில் வந்திறங்கியதும் வண. J. A. இராசநாயகம்சுவாமியார் அவர்களால் வரவேற்கப்பட்டு ஆலயத்துள் அழைத்துச் செல்லப்பட்டனர். பின் செபமாலை ஓதப்பட்டதும் கட்டளைச்சுவாமியார் அவர்கள் ஒலிபரப்பி மூலம் பிரசங்கம்செய்தார். அதில் சுவாமி ஞானப்பிரகாசரின் முயற்சியைப்பற்றியும் குறிப்பிட்டார். அர்ச். அந்தோனியாரின் புதுமைகளை எடுத்துரைத்து, சாதி சமய பேதமின்றி எவரும் அவரின் சலுகையைத் தேடலாமெனக் குறிப்பிட்டார்.

பின் மேற்றிராணியாண்டவர் அவர்களால் வேஸ்பர் பாடப்பட்டு ஆசியும் அருளப்பட்டது. 20-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாள் மிகு பத்தியாய்க் கொண்டாடப்பட்டது. அயற்கிராமங்களிலிருந்து அநேக இந்துக்கள் உட்படப் பெருந்தொகையினர் சமுகமாய்நிற்க கட்டளைச் சுவாமியாரால் பாடற்பூசை நடத்தப்பட்டது.

பின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் வெகு சிறப்பாயும் பத்தியாயும் நிகழ்ந்தேறியது. இக்கோவிலில் இம்முறை நடைபெற்ற திருநாள் அநேக சைவ நண்பர்களுக்கு நிச்சயமான அருட்சியை உண்டாக்கியிருக்கும்.

இத்திருநாளைச் சிறந்தமுறையில் நடத்திமுடித்த பிறசமயத்தவரை மனந்திரும்பும் மீசாம் எனப்படும் நல்லூர்மீசாம் கட்டளைக்குரவரான வண. இராசநாயகம்சுவாமியார் அவர்களை எல்லோரும் வாழ்த்திச் சென்றனர்.

## பிரபல இந்துச் சீன ஓவியர்

வியட்னும் தேசம் எனத்தற்போது அறியப்படும் இந்துச் சீனதேசத்திலே, திருலேவான்தே என்ற பிரபல கத்தோலிக்க ஓவியர் மிகப் பிரசித்திபெற்றவர். இவர் தற்பொழுது ரோமாபுரியிலிருக்கிறார். பரிசுத்தவருடத்தின்போது அங்கு நடைபெறப்போகும் வேதசம்பந்தமான கலைக்காட்சிக்கென வியெட்னும் சைத்திரீகர்களும், சிற்பிகளும் அனுப்பிவைத்துள்ள பொருட்களைக் கவனிக்கும் பொறுப்பு இவரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பட்டுத்துணியில் இவர் தீட்டியுள்ள அனம் தேச வேதசாட்சிகளின் இரு படங்களை அந்தக் காட்சிக்கெனக் கொண்டு போயுள்ளார். இவர் சிறுபராயத்தில் கனோய் நகரில் கல்வி பயின்றபிறகு பரீஸ் நகரிலுள்ள நுண்கலைக் கல்லூரியில் பயிலுவதற்காக அனுப்பப்பட்டார். அவர் பரீசிலிருக்கையில் வரைந்த படங்களை ரசிகர்கள் மிகப் பாராட்டியதால் கொச்சின் சீன அரசாங்கம் அவருக்கு உபகாரச்சம்பளம் வளங்கி உயர்தரப் பயிற்சிக்கு இத்தாலிக்கும் கிறீசுக்கும் அனுப்பிவைத்தது.

திரு. லேவான்தே 1936-ம் ஆண்டு ஆனிமாதம் முதலாம் தேதியன்று ரோமாபுரியில் ஞானஸ்நானம்பெற்றார். கடந்த 12 வருடங்களாகக் கனோய் நகரில் வசித்துவந்தனர்.

# மடுப்பகுதிப் பிரயாண சேவை

இம்முறை மடுப்பதிக்கு யாத்திரை செய்பவர்களுக்கு வசதியாகும்பொருட்டு அரசினர் 18 விசேஷ புகைரதங்களை ஓடவிட்டிருக்கின்றனர் என அறியக்கிடக்கின்றது.

# இலங்கைக்குப் பாப்பரசரின் ஆசி

### மந்திரி பண்டாரநாயகாவுக்கு அளித்த தரிசனை

ரோமாபுரியில் நடைபெற்ற உலக சுகாதார ஸ்தாபன மகாநாட்டுக்குச் சென்றிருந்த இலங்கை சுகாதார-ஸ்தல ஸ்தாபன மந்திரி கௌரவ எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் சென்ற 26-ந் திகதி விமான மூலம் இலங்கைக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்.

பத்திரிகை நிருபருக்கு அவர் கூறியதாவது: ரோமாபுரியில் பரிசுத்த பாப்பரசரைத் தரிசனம்செய்யும் மகத்தான பாக்கியம் எனக்குக்கிடைத்தது. இலங்கையிலுள்ள கத்தோலிக்கர்கள் நல்ல பிரசைகளா? என்று பாப்பரசர் என்னிடம் கேட்டார்.

நான் அதைப்பற்றித் திடமான மறுமொழி கொடுத்தேன். அதைக்கேட்டுப் பாப்பரசர் மிகவும் சந்தோஷப்பட்டு:

"உங்கள் நாட்டுக்கு நான் ஆசீர்வாதம் அளிப்பதுடன், அந்நாடு சுபீட்சத்துடனும், சமாதானத்துடனும், சந்தோஷத்துடனும் இருக்கவேண்டுமென ஆசிக்கிறேன்" என்பதாகப் பன்முறை கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதமடுத் திருப்பதிச் சரிதம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தைக் கண்டதும் என் உள்ளம் துக்கத்தில் மூழ்கியது. ஒரு மாதர் சபை மேற்றிராணியார், தம்மாசில்லாத் தாயாருடைய வீட்டை அப்படிப்பட்ட கேவல நிலையிலிருக்க விட்டாரென்ற பழிச்சொல்லிற்கு இடங்கொடேன் என்று அன்றே அங்கே சபதஞ் செய்தேன். அதி பரிசுத்த இராச கன்னிகைக்கு அந்த வன்னிக்காட்டில் ஒரு அலங்காரமான கோவில் நிருமாணிக்கவேணுமென்று தீர்மானித்தேன்'' என்று பொஞ்ஜீன் ஆண்டவர் சொன்னாராம்.

உடனே மேற்றிராணியார் புதுக்கோவிலுக்கு மூலைக்கல்லு ஆசீர்வதித்து இப்போது நாங்கள் காணும் கோவில் கட்டிடத்திற்கு 1872-ம் ஆண்டு ஆவணிமாசம் 8-ந்திகதி அத்திவாரக்கல்லு நாட்டினர். அவருக்குப் பின்வந்த மேலிசன் ஆண்டவர் அந்தவேலையைத் தொடர்ந்து நடத்தினர். அதிகப்பற்றுன கட்டிட வேலை யூலன் ஆண்டவர் மேற்பார்வையிலேயே நடந்தது. வண. பூலங் சுவாமியார் கோவிலுக்கு விசித்திரமான முகப்பு அமைத்தார். பரிபாலன சுவாமிமாரின் அயராத முயற்சியின்பலனே, நாம் இப்பொழுது காணும் எழில்நிறைந்த தேவாலயம்.

1870-ம் வருஷம் பொஞ்ஜீன் மேற்றிராணியார் மடுக்கோவில் வருடாந்த உற்சவம் ஆடிமாசம் 2-ந்திகதியில் நடைபெறவேண்டுமென ஏற்பாடுசெய்தார். "அந்நாட்தொடக்கம் இந்த உற்சவம் ஆயிரம் பதினுயிரக் கணக்கான தொழும்பர்களை வருடாவருடம் கவர்ந்துகொண்டே வருகிறது." 1874-ம் ஆண்டு யூலன் மேற்றிராணியார் பிள்ளைக்குரிய தம் வணக்கத்திற்கும் அன்பிற்கும் அடையாளமாக பொன்னிற்செதுக்கி நவரத்தினங்கள் பதித்து சித்திரவேலைப்பாடுசெய்த மணிமகுடமொன்றை மடுமாதாவின் அற்புதமான சுருபத்தின் சிரசில் புனைந்தார்.

பாலம்பிட்டியிற் சுட்ட செங்கற்களைக்கொண்டு புவாசோ சுவாமியார் குருமனையையும் சமையற்சாலையையும் கட்டினர். வண. சூர்டோன் சுவாமியார் கோவில் அத்திவாரத்தைப் பாலம்பிட்டியிலிருந்து கொண்டுவந்த கருங்கல்லாற் கட்டினர். மடுவில் முதற்கிணறு கட்டியவரும் அவரே. இரண்டாவது கிணறு வண. குறேற் சுவாமியாரால் வெட்டப்பட்டது. நற்கருணைச் சிற்றாலயத்தையும் அத்துடன் சேர்ந்த அறைகளையும் வண. மசியே சுவாமியார் கட்டுவித்தார். அவரே மூன்றாவது கிணறும் வெட்டியவர். மசியே சுவாமியார் தொடக்கிவிட்ட பீடஸ்தானக் கட்டிடப்பகுதியைச் சில திருத்தங்களுடன் வண. மேரி சுவாமியார் செய்துமுடித்தார். கோயிற்கூரைக்கு வேண்டியவைகளைச் சேகரித்ததும், முன்றில் அத்திவாரக் கட்டிடத்தைத் தொடங்கியதும் வண. டினோ சுவாமியார். கட்டிடவேலைக்குத் தேவையான செங்கற்களை அங்கேயே சுடுவித்துக் கோவிலின் அதிகப்பற்றான வேலையை வண. அந்தோனிச் சுவாமியார் முடித்தார். இலங்கையிலுள்ள கோவில் தூண்களில் ஆக உயரமான இந்தக் கோவில் தூண்கள் வவுனியா-திரிகோணமலைப் பாதையிலுள்ள மணியர் குளத்திலிருந்து கொண்டுவரப்பட்டன. மற்றச்சகல வேலைகளுக்கும் பொதுவில் பொறுப்பாளியாயிருந்தவர் வண. ஒலிவ் சுவாமியாரே. குருமாருக்கு அறைகளும் மற்றும் வசதிகளும் செய்து யாத்திரிகருக்குச் சில வீடுகளைக் கட்டியவரும் இவர்தான். யாத்திரிகர் வசதிக்காகக் கட்டியிருக்கும் மற்றக் குடிசைகளும் வீடுகளும் அவருக்குப் பின்வந்த குருமாருடைய வேலை. மடு நந்தாவனத்திற்கு எழிலைக்கொடுப்பதும், தற்போது யாத்திரிகர் குளிப்பதற்கு வசதியாயிருப்பதுமான தடாகம் வண. ஒலிவ் சுவாமியாரின் நீர்ப்பாசன நிர்மாண நிபுணத்துவத்திற்கு ஓர் சான்றென்றால் மிகையாகாது.

மடுப்பதியில் உள்ள லூர்துகெபியும் விசேஷ கவர்ச்சிக்குரியது. குளிப்பதற்கென்று சிமென்றால் அமைத்திருக்கும் தண்ணீர்த்தொட்டிகள் குறிப்பிடத்தக்கவை. வண. உக்தின், வண. லேக்குத்தர், வண. புறேகான் சுவாமிமார் யாத்திரிகருக்காகவேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்து வைத்துள்ளனர். கோவிலில் இருந்த மரப் பீடத்திற்குப் பதிலாக 1944-இல் பளிங்குக் கற்பீடம் அமைத்ததும் 1947-இல மின்சார இயந்திரமொன்று நிறுவி வீதிகள், வீடுகள்தோறும் வெளிச்சந்தந்துதவியதும் வண. புறேகன் சுவாமியாரின் பயனும். நம்மேற்றிராணியார் றோமாபுரி சென்று பாப்பரசரின் தரிசனை பெற்றபோது பாப்பரசர் மடுப்பதிக்காக ஒரு பெரிய மகத்துவமிக்க செபமாலையை உபகரித்தார். இலங்கையில் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கும் சிறுதொகையான கோயில்களுள் மடுக்கோவிலுமொன்று. இக்கோவிலை 1944-ம் ஆண்டு ஆனிமாசம் 25-ந்திகதி கியோமார் மேற்றிராணியார் அபிஷேகஞ்செய்துவைத்தார்.



பரிசுத்ததந்தை பன்னிரண்டாம் பத்திநாதர்

### மாதாவின் மகுடதாரணம்

மகாவந். கியோமார் ஆண்டவரின் மேற்பார்வையில் மடுக்ஷேத்திரம் திருப்திகரமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. ஆண்டவர் அவர்கள் 1924-ம் ஆண்டு பங்குனிமாசம் 9-ந்திகதி மேற்றிராணித்துவ அபிஷேகம்பெற்றுத் தமது கன்னிக் கைங்கிரியமாக மடுக்கோவிலின் சுதாபக விழாவை அவ்வருடம் ஆடிமாசம் 2-ந்திகதி கொண்டாடினர். மருதமடுவைச் சேர்ந்த நிகழ்ச்சிகளில் கொடுமுடியான வைபவம், கத்தோலிக்க கொண்டாட்டங்களில் முன்ஒருபோதும் கண்டிராத சனத்திரளின் மத்தியில் புதுமைவாய்ந்த செபமாலைமாதாவின் திருச்சுருபத்துக்கு அன்று 1924-ம் ஆண்டு ஆடிமாசம் 2-ந்திகதி திருமுடிசூட்டியதேயாம். "மகா மனந்திரும்புதலியக்க" மென்னும் மடுமாதாவின் மகா சுற்றுப்பிரகாரத்தை நாம் எந்நாளுமே மறக்க முடியாது. சரித்திரத்தில் முதல்முறையாக மடுமாதாவின் சுருபம் 1948-ம் ஆண்டு பங்குனித்திங்கள் 15-இல் திருப்பதியைவிட்டுப் புறப்பட்டு வைகாசி 3-ந்திகதிவரையும் யாழ்ப்பாண உத்தியானம் முழுவதும் கொண்டுசெல்லப்பட்டது.

மாதாசுருபம் போன இடமெங்கும் மங்களமான வரவேற்பு; இருகரம் கூப்பி இறைஞ்சிய வரவேற்பு; அந்நாட்களில் உழுத்து, வாடிவதங்கியிருந்த உள்ளங்களெல்லாம் புத்துயிர் பெற்றன. குளிர்ந்துபோயிருந்த இருதயங்களெல்லாம் ஞானக்கொழுந்துவிட்டெரியத் தொடங்கின. வருஷக்கணக்காய்க் கோயில், கொம்பிசமில்லாமல் அலைவாய்ப்பட்ட ஆத்துமாக்களை மாதா தேடிச் சென்று மனந்திருப்பிய மேரையை வருணிக்க வாக்குண்டோ? பிதாவின் வீட்டிற்குத் திரும்பிய ஊதாரிகள் எத்தனை? இராவிரவாய்த் தீர்ந்த ஞானப் பிணிகள் எத்தனை? பாவப்பழி ஒழித்து பரமன்பதம் பணியப் படித்தமனம் எத்தனை? தேவஊழியத்தில் தீவிரமுயற்சி எடுக்கத் தைரியங்கொண்ட இளம் இதயங்களெத்தனை? பரமன் திருப்பலியில் பலன் நிறையப் பங்குகொள்ளப் பயின்ற பக்தர் எத்தனை? செபத்துடன் தபஞ்செறிந்த செபமாலைகள் எத்தனை? மாதாவின்மாலை ஓதுகையில் ஞான மதுவுண்ட மதுகரங்கள் எத்தனை? இந்த நன்மையெல்லாவற்றையும் செய்தது மடுமாதாவின் திருச்செயலே.

இலங்கைக் கத்தோலிக்கர் தேவதாயாரில் உருக்கமான பத்தியுள்ளவர்கள். அப்பத்தியின் உச்சநிலையை மருதமடுவில்நடக்கும் பல திருவிழாக் காலங்களில் காணலாம். மடு யாத்திரை ஒரு ஞானஓடுக்கம். யாத்திரிகர் தம்பாவங்களுக்கு விமோசனந்தேடி, பச்சாத்தாபத்துடன் பாவசங்கீர்த்தனம்செய்து சற்பிரசாதம் உட்கொண்டு அடிக்கடி செபஞ்செய்து தேவநற்கருணை சந்தித்தும் செபமாலையைத் தியானித்தும் வருவார்கள். பாவிகளின் தஞ்சம் மடுமாதா; பச்சாத்தாபிகளின் அடைக்கலமும் அவவே. சஞ்சலப்படுவோருக்கு ஆறுதல் தந்து, அண்டிவந்தோருக்கு அபயங்கொடுத்து அனைவரையும் பரமன் அடிசேர்க்கும் பரம நாயகி. இதுசம்பந்தமாக உத்தரவாதம்பெற்ற நூலாசிரியர் பின்வருமாறு எழுதுகிறுர். மாதா பக்திக்கு மடைதிறந்துவிடுவது மடுப்பதி. மேற்றிராணிமார் மாதாவிற்கொண்டிருந்த பக்தி அநேகரை அப்பதிக்குவரத் தூண்டியது. "வன்னிக்காட்டின் புதுமை" என்னும் சிறப்புநாமம் பெற்ற அப்பாரிய கோவிலை அதிக செலவிட்டுக்கட்டி அலங்கரித்தனர். தாமேநின்று திருநாட்களை நடத்தி அவைகளிற் தாமும் பங்குபற்றி நோவினைவேளைகளில் பிரசங்கமுஞ் செய்தனர். வருடந்தோறும் இந்தத்தலத்திற்கு வரும் யாத்திரிகரின்தொகை இளம்பிறைபோல் வளர்ந்துகொண்டே வருகின்றது. ஆடிமாசம் 2-ந்திகதி சிலவேளை நூறுயிரம் சனம்வரையிலும் வருவார்கள். கத்தோலிக்கர்மாத்திரமல்ல—பலபிரிவுபட்ட புரொட்டெஸ்தாந்தரும், இந்துக்கள், புத்தர், சோனகரும் பைசாசகணங்களையும் இயற்கைப்பொருட்களையும் வணங்குவோரும் அருகே இருந்து தம்வித்தியாசங்களை மறந்து, மாதாவை வாயார வாழ்த்துவார்கள். பலசாதியத்து ஆண்பெண் பாலாரும் மடுமாதாவிற்குத் தோத்திரஞ் செலுத்தியபின் திருநாள்முடிவில் அநேக வருடங்களாக நடத்தப்படும் 'விருந்து' உண்பார்கள். ஆயிரக்கணக்கானோர் பாவசங்கீர்த்தனஞ்செய்து மாதாவின் பாதநிழலில் முற்றுக மனந்திரும்பி விடுவார்கள். பிறசமயத்தவர்களும் சத்தியவேதத்தின் உண்மையை உணரத் தொடங்குவார்கள். இதற்கென்று ஆயத்தமாய் வந்தவர்கள் மடுவிலேயே ஞானத்தீட்சைபெற்று சத்தியமறையில் சேருவார்கள்.

ஆடி 2-ந்திகதி நடக்கும் பிரமோற்சவ தினத்தில வந்துகுவியும் சனக்கும்பலின் நெருக்கடியைக் குறைக்கும் நோக்கத்துடன் வேறுபல தினங்களிலும் திருவிழா நடத்த ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது. பங்குனி, வைகாசி, ஆவணி, ஐப்பசி மாசங்களிலும் திருநாட்கள் நடைபெறுகின்றன.

மடுப்பதி பிரபலியம் பெற்றோங்குவது யாழ்ப்பாண மேற்றிாசன மாதா சபைச் சுவாமிமாரின் அயரா உழைப்பின் பயனேயாகும். வருஷந்தோறும் யாத்திரிகரின்தொகைஅதிகரித்துக்கொண்டேவருகிறது. யாத்திரிகரின்வசதிகளை விசாரித்து உணவுப்பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதுமல்லாமல் அவர்களுக்குக் காட்டப்படும் அன்பாதரவும் மழைவேளைகளில் செய்யும் உதவிகளும் மடுப்பதியின் மறக்க இயலாத செயல்கள். இப்புனித புண்ணிய தலத்தைப்பற்றி வாசகநேயர் உய்த்துணருமபடி சொற்பகாலத்திற்குமுன் வெளிவந்த நூலிலிருந்து சிலவற்றை ஈண்டு தருகிறோம்.

"கோவைக்குருமார் தேவதாயாரின் பேரால் இலங்கையில் அடியிட்ட கோவில்கள், புண்ணியதலங்கள் யாவற்றிலும் மாதோட்டப்பகுதியிலுள்ள மடு ஆலயத்தைப்போல் கீர்த்திவாய்ந்தது வேறில்லை. அக்குருமார் காலத்திலேயே மருதமடு புதுமைநிறைந்த தலமாகப் பெயர்பெற்றிருந்தது. மடுக்கோவில் எல்லைக்குள் எந்த விஷப்பாம்பு தீண்டினாலும் வினைநோராது என்பது மக்களின் பொதுநம்பிக்கையாய் இருந்துகொண்டே வருகிறது. முன்னிருந்த குருமார் நன்றாய்ப் பரப்பியிருந்த மாதாபக்தியை மாசில்லா மரியாயின் பரித்தியாகிகள் சென்ற இடமெல்லாம் செழித்துவளரச்செய்யும் முயற்சியே மடுப்பதியையும் பிரபலிய யாத்திரைத் தலமாக ஓங்கப்பண்ணினது. மாதா சபையின் பிரபலிய இவ்வருடம் மாதாபத்தியின் விசேஷபலன்களைக் கண்கூடாய்க் காட்டும் காலமாய் விளங்குகின்றது. மாதாவுக்கு முடிசூட்டிய 25-ம் வருட நிறைவு யூபிலி வருடம் இதுதான்.

மாதாசபையின் தலைவராகிய எம் மேற்றிராணியார் தமது மேற்றிராணித்துவ வெண்பொன் யூபிலியைக் கொண்டாடுவதும் இவ்வருடத்திலேயே.

மாதாசபையின் தாசராய்—மாதாபத்தியின் பிரதம சேனுதிபதியாக—முதல்முறை—சுதேச துணைமேற்றிராணியாராக மிகவந்திக்கத்தக்க J. எமிலியானுஸ்பிள்ளை O. M. I. அவர்கள் மேற்றிராணித்துவ அபிஷேகம் செய்யப் பெற்றதும் இந்த 1949-ம் வருடத்திலேயே.

---

### தீவுப்பகுதி ஐக்கியதினக் கொண்டாட்டம்

நிகழும் 1949-ம் வருடம் ஆடிமாசம் 2-ந்திகதி (2-7-49) சனிக்கிழமை ஐக்கியதினமாகக் கொண்டாடப்படும். அன்று பிற்பகல் 2 மணியளவில் ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரியில் ஓர் விளையாட்டுப்போட்டி நடைபெறும். வெற்றிபெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். இப்போட்டியை வெற்றிகரமாகக் கொண்டாடுவதற்கு உங்கள் பாடசாலையும் பங்குபற்றி உதவிசெய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். S. P. C.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமடு வாழ்
# மங்கையர்க் கரசிக்கு மாருத மங்களம்

[ திருத்தாண்டவம் ]

வெண்பா

பொன்ஞர் சிறைத் தேன்கள் பூமுரலுஞ் சோலைமடு
மன்ஞ ராசதிரு மாமரியே — மின்ஞர்
பதிகமலர் புனைந்து பங்கயமென் தாள்பணிய
துதிபெருகு மீசன் துணை.

தேவாரம்

1. திருவே! என் ஜெயமணியே! திரியேகாதி
தேவனுறை யாலயமே! சென்ம மாசில்
கருவே! என் கண்ணொளியே! கரும்பே! தேனே!
காசினியோர் கதிபெறுங்கற் பகமான
தருவே! பொன் சரணமலர் தஞ்சம் வந்தேன்
தாயே! நின் சேயனெனைத் தள்ளிடாதே
மருவே பூங் கமழ்மருத மடுவில் வாழும்
மணிவிளக்கே! என்பவநோய் மாற்றுவாயே.

2. பொன்னே! நன் மறையொளியே! புனித ஞானப்
பூரணியே! அன்னம்மாள் பூத்தசெல்வ
மின்னே! என் பாசவினை தானகற்ற
விண்ணவனை யீந்த வித் தானமுத்தே!
உன்நேய மைந்தனைமன் ருடியேழைக்
குற்றதுயர்க் கலிதீர்ந்து வுய்யநல்கும்
அன்னே! மா மருதமடுப் பதியில் வாழும்
ஆரணங்கே! செபமாலை யம் மணியே!

3. வானரு மமரர்துதி பரவுங்கன்னி
மாமரியே! கருணைபொழி மாணிக்கமே!
மீனரும் முடிபுனைந்து வெய்யோன் தன்னை
மின்உடையா யணிந்துஇள மதிமிதித்தாய்!
நானரோ நீயாரோ வென விருந்தால்
நாயடியேற் கோர்துணைவே ருருமில்லை.
தேனரும் மருதமடுச் செல்வியே! நின்
சீதமலர்ப் பாதவருள் செய்குவாயே.

4. அன்னம்மாள் ஈன்றதவ ஆணிமுத்தே!
அந்தரித்தோர் பிணிதீர்க்கு மரு மருந்தே!
வன்னலகை மாயவலை தனிற்சிக் குண்டே
வருந்தாமல் மாமரியே! வறிய னேனை
கன்னிகா ரத்தினமே! கருணைவித்தே!
காப்பது நின் கடனென்மேற் கடாட்சமுற்றே
அன்னையே! அருட்சோன மாரி பெய்து
அடியேனைக் கைதூக்கி ஆளுவாயே.

5. தஞ்சமென வருமடியார்க் கடைக்கலஞ் செய்
தற்பரியே! மன்னர்குலந் தன்னில் வந்தே
நஞ்சுமிழும் பேயரவின் தலைமிதித்த
நாயகியே! யுனைநினையா நாயனேன்
வஞ்சனையால் வல்வினையால் வாடிநொந்து
வந்தடைந்தே னுந்தனர விந்தமேவு
பஞ்சினுமுன் பரிமளமே பரிவா யீந்து
பாதுகாத் தெளியேனைப் பாலிப் பாயே.

6. அன்னையே! யருட்கரு ணனந்த மோட்ச
அம்பரியே! நம்பினவர்க் காதரவு நீயே!
உன்னையே யிரந் தழுது ஓயாவண்ணம்
ஓலமிடவே கடைக் கண்ணுதவி செய்
என்னையே தள்ளினுமுன் கமல பாத
மினிவிடே னீஸ்பரியே! இதுவே யுண்மை
பொன்னியே! பொருமருத புரத்தில் வாழும்
பூரணியே! ஏழைபவம் பொறுத் தாள்வாயே.

7. தேனே நற்தெள்ளமுதே! தெவிட்டா அன்பே!
திவ்யகனி மாமரியே! செங்கை தங்கும்
கோனேய குமரேசன் தனையி ரந்தே
குள்ளகப டானவஞ்சக் கொடிய பாவி
நானேழை யழல் நரகுக் காளா காமல்
மாமரியே! மலர்ப்பாத வரமீ வாயே.

8. சிந்தாத கருணைபொழி தேவ தாயே!
தீதுமிகு பாதகனென் செய்வே னம்மா?
வந்துறையு மலகையுட லுலக மென்னுஞ்
சத்துருகள் நித்தமெனைச் சதிப்பதாலே
அந்தி பகல் நொந்தடியேன் நைந்துவாடி
அனலில் விழு புழுவதுபோ லானேன்பாவி
சந்தனமா மருதமடுப் பதிவாழ் தாயே!
சரணார விந்தமலர் தந்தாள் வாயே.

9. அழுதலறி ஓலமிட்டே யடிமை வந்தேன்
ஆயே! மின் னம்புலிமே லமர்ந்த பாதம்
தொழுதே யென் சென்னிமிசை தேடிநின்றேன்
சுந்தரமா தரசேயென் துயர்கள் பாவம்
முழுதுமே பொறுத்து இன்ப முத்திசேர
முன்னவனை வேண்டிமன முவந்திரங்கும்
செழுமலர்ப் பூஞ்சோலைமடுப் பதிவாழ் கன்னி
திருவடிக்கே அப்யமருள் செய் குவாயே.

# மருதமடு மீனாட்சி அம்மாளுக்கு அர்ச்சனை

— திருநாவுக்கரசு —

வெண்பா

1. தவத்தை வெறுக்கவுமெந் தற்பாஞ ரின்சத்
துவத்தை யெதிர்க்கவும் பேய்சொல்லப்—பவக்கடலில்
ஆழா தருள்புரியு மன்னைமரு தைப்பதியிற்
தாழாத தென்ன தலை.

2. மான்காடி பன்றிமரை கோட்டுமா வுடனே
வான்புலி யுஞ்சேரு மருதமடுத்—தேன்பதியில்
வீணாட் கழியாமல் மேவித் திருமரியைக்
காணாத கண்ணென்ன கண்.

3. பருதிக் கதிர்நுழையாப் பண்புடை யசோலை
மருதமடுப் பதியில் வந்து—கருதுமரி
துய்ய புகழதனைத் துன்பகலக் கேட்டின்று
செய்யாத தென்ன செவி.

4. வீணபாக் கின்றி விசுவாச முன்னி ருத்திச்
சேண்புவியின் பற்றைச் சிதறடித்து—பூண்மயலை
வீழ்த்தி மருதமடு மேவுமரி மெய்யருளை
வாழ்த்தாத வாயென்ன வாய்.

5. சோலைசெறி வான்மருத மடுத் தொல் பதி வல்லசெப
மாலைமரி யெனவே வாழ்ந் திருக்கும்—சீலமுள்ள
தாட்டாமரையாள் சமுகமதிற் கைகூப்பல்
காட்டாத கையென்ன கை.

6. நோயர்மிடி யருள நொந்தவர்கள் வந்தடையின்
நேயஅருள் கொழிக்கு நீண்மருதைத்—தாயார்முன்
தாழாமலே நிலத்திற் சாட்டாங்க மும்பதிய
வீழாத மெய்யென்ன மெய்.

7. பாலைமுதிரை படர்மடுவில் மேவுசெப
மாலை மரியன்னையை மன்ருடச்—சோலை
நடவாமல் நாட்போக்கி நாடுமிந் தக்காலைக்
கடவாத காலென்ன கால்.

10. சுடர்காலும் விடியுடுவே! சுகிர்த ஞானத்
துய்யபரி பூரணியே! தொண்டனெனை
அட்ர்பவ நோய் தீயவினை யணுகா வண்ணம்
அன்னையே இன்னல் தவிர்த் தாளும் பாந்தட்
படமுடியைக் கெடமிதித்த பாத மீந்தே
பாவியெனைக் கைதூக்கிப் பாதுகாத்தே
இடரகலமா மடுஅன்னையே! இன்று மென்றும்
எம்மரண வேளையிலு மிரட்சிப்பாயே.

# கொழும்புத் தபால்

நமது நிருபர்

### கௌரவ பண்டாரநாயக அவர்கட்குப் பாப்பரசரின்பேட்டி:

நமது சுகாதார—ஸ்தலஸ்தாபன மந்திரி கௌரவ பண்டாரநாயகா அவர்கள் அகிலஉலகசுகாதார ஸ்தாபனமகா நாட்டுக்கு உரோமாபுரி சென்றிருந்த போது சென்ற 24-ந்திகதி காலை பாப்பரசரின் பேட்டியைப் பெற்றார். பரிசுத்த தந்தையவர்கள் மந்திரியவர்கட்கு தமது படிப்பறையிலே பேட்டி அளித்த போது சுத்தஆங்கிலமொழியிலே தெளிவாகப்பேசி இலங்கை மக்களை ஆசீர்வதித்தார் என்றும் தம்மோடு அன்பாக அளவளாவினர் என்றும் மந்திரி அவர்கள் கூறினர்கள்.

### விஞ்ஞான சாஸ்திரக் கண்காட்சி:

கொழும்பு அர்ச். ஆசீர்வாதப்பர் கல்லூரி மாணவரால் ஒழுங்கு செய்யப்பட்ட விஞ்ஞான சாஸ்திரக் கண்காட்சியைப் பேராசிரியர் மயில்வாகனம் அவர்கள் சென்ற 24-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் திறந்துவைத்தார்கள். அவ்வகையான காட்சியின் பயனைப் பற்றித் தமது திறப்புரையில் புகழ்ந்து கூறினர். விஞ்ஞான சம்பந்தமான சொற்பொழிவுகள், விவசாயப்பகுதி உபதலைவர் திரு. ஏ. டபிள்யு. யுவக்கீம் அவர்களாலும், சங். விறதர் தியடோறெற் அவர்களாலும் நிகழ்த்தப்பட்டன. பிறபாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுசனங்கள் ஆயிரக் கணக்காகக் காட்சியைக்கண்டு பயன் பெற்றார்கள். அநேகருக்கு அங்கு நடந்தவைகள் செப்படிவித்தைபோற் காணப்பட்டன.

### நகைச்சுவை அரசு கிருஷ்ணனும் மதுரமும்:

இவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சென்யோசேப் கல்லூரிமண்டபத்தில் நகைச்சுவை ததும்பும் இழந்தகாதல் என்ற நாடகத்தை நடத்திக் காண்பித்தார்கள். மண்டபம் நிறையஇருந்த ரசிகர்கள் நகைச்சுவை விருந்தை ஆயாசமின்றிப் பருகினர்.

### றப்பரின் புதியஉபயோகம்

இலங்கையர் ஒருவரின் ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட றப்பரின் சிலபுதிய உபயோகங்களை வியாபார விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினரின் உதவி கோரப்பட்டிருக்கிறது. றப்பரை மூலப்பொருளாகக்கொண்டு மரஎண்ணெய், கிருமிநாசினிகள், வார்ணிஷ்வகைகள், வர்ணத்தைக்கரைக்குமெண்ணெய் முதலியன செய்யலாமெனவும், இறக்குமதி செய்யப்படும் இத்தேவகைப் பொருள்களின்தரத் தில் எவ்வகையிலும் குறைவில்லாத இவைகளைக் குறைந்தவிலைக்கு விற்கமுடியுமெனவும் அவர் கூறுகிறார். கைத்தொழில்—கைத்தொழிலபிவிருத்தி மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தமது கைத்தொழிற்பகுதியிலுள்ள நிபுணர்களால் பரிசோதிக்கும்படியும் கேட்கப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியவேத பாதுகாவலன்

**1949-ம் ஆண்டு ஆனி மாசம் 30-ந் திகதி**



சருவேசுரனின் கிருபையாலும் பரிசுத்த அப்போஸ்தொலிக்க ஸ்தானத்தின் அருளினாலும் யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய

**யோண் அல்விறெற் கியோமார்**

ஆண்டவராகிய நாம்

நமது ஆதீனத்திலுள்ள குருப்பிரசாதிகளுக்கும், விசுவாசிகளுக்கும் யேசுநாதரின் நாமத்தினால் சமாதானமும் ஆசியும்கூறி விடுக்கும்

## நிருபம்

அருமையான குருமாரே !
நேசமிக்க சகோதாரே!

நமக்குமுன் யாழ்ப்பாணத் திருச்சபையை ஆட்சிசெய்த மகா வந். புறோ ஆண்டவர் அவர்கள், மடுத்தாயாரின் திருச் சுரூபத்துக்கு மகுடதாரணம் செய்யவேண்டுமென்று மிகுதியும்விருப்புற்றிருந்தார். அதனால் 1921-ம் ஆண்டு யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் குருமாரினதும் விசுவாசிகளினதும்போரால் —மடுமாதாவின் திருச் சுரூபத்துக்கு முடிசூட்டுவதற்கு அனுமதி தரும்படி, வத்திக்கானுக்கு மனுப்பண்ணியிருந்தார்.

அம்மனுவுக்கு 1921-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ந் திகதி எழுதப்பட்ட விடையானது, மிக மாட்சிமைதங்கிய கருதினல் வான்ரொசும் ஆண்டவரிடமிருந்து, அப்போஸ்தொலிக்க ஸ்தானுபதி ஆண்டவரவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவ்விடையின் சுருக்கம் பின்வருமாறு: "நமதன்புக்குரிய யாழ்ப்பாண மேற்றிராசனக் குருமாருக்கும் விசுவாசிகளுக்கும் நமது மேலான அன்பைக் காட்டும்பொருட்டு, நீங்கள் அனுப்பிய மனுப்பத்திரத்தை வழமைபோல, வத்திக்கான் சபையில் சமர்ப்பிக்காமல் நாமே நேரில் பரிசுத்த பிதாவைச் சந்தித்து அவர்களிடம் மனுவைச் சமர்ப்பித்தோம். சித்திரை மாசம் 7-ந் திகதி பரிசுத்த தந்தை நமக்கருளிய தரிசனையில் உங்கள் மனுவில் நீங்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கைக்கு மனமுவந்து இணங்கியருளினார். ஆகவே, இந்தஅனுமதியின்பேரில் பரிசுத்த பாப்பரசரின் நாமத்தினால் வத்திக்கான் சபையாரால், குறித்த நியமப்படி மடுத்தாயாரின் திருச் சுரூபத்துக்கு முடிசூட்டும் சுதந்தரத்தை உமக்கு அளிக்கின்றோம்.

நாம் அறிந்தவரையில் யாழ்ப்பாணக் குருமாரும் விசுவாசிகளும் பரிசுத்த கன்னிமரியம்மாளில் அதி உருக்கமான பத்தியுள்ளவர்களாயிருப்பதினால் முடிசூட்டு வைபவம் மேலும் மாதா பக்தியை வளர்க்குமென்று நம்புகிறோம்."

யாழ்ப்பாண மக்களுக்கு இது மட்டடங்கா மகிழ்வைத் தருவதாயிற்று. பண்டைக்காலந் தொடக்கமாக இவர்களிடம் பதிந்துள்ளது மாதாபத்தியாகும்.

யாழ்ப்பாணம், திருத் தாயாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட மூன்றும் நூற்றாண்டு நிறைவும் 1921-ம் ஆண்டு புரட்டாசி மாசம் பூர்த்தியானதினால் அவ்வாண்டிலேயே தாயாருக்கு முடிசூட்ட அனுமதி கிடைத்தது மிகப் பொருத்தமாயிற்றெனலாம்.

மூன்று நூற்றாண்டுகளுக்குமுள் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண நகரியைக் கைப்பற்றியபின் தற்போதுள்ள கோட்டையின் மேற்குப்பக்கலாயுள்ள புதுமைமாதாவின் ஆலயத்தில் வைத்து, யாழ்ப்பாணம் தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. அப்போது நடைபெற்ற சுற்றுப்பிரகாரத்தில் மாதாவின் திருச்சுரூபம் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் பவனிவந்து, தாயாரும் அவவின் திருச்சுதனும் யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாண மக்களையும் ஆட்சிகொள்ளலானார்கள்.

மருதமடுத்தாயாரின் திருச்சுரூபம் 1921-ம் ஆண்டு ஆடி 2-ந் திகதி முடிசூட்டப்படுவதற்கு முன்பு குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் தெய்வசித்தம் வேறாயிற்று. அவ்வருடம் மடுக்குளத்தில் வெள்ளமேற்பட்டு கரைக்கட்டையுமுடைத்து, கோவில்முகப்பையும்வீழ்த்தியமை காரணமாக முடிசூட்டுவைபவம், நமக்குமுன்னிருந்த மேற்றிராணியாரால் பின்போடப்பட்டது. இதன் பின் அம்மேற்றிராணியாரும் சருவேசுரனில் இளைப்பாற்றியடைந்தனர். பின் அவர் விரும்பிய முடிசூட்டுவைபவத்தை நடத்திமுடிக்கும் சலாக்கியம் நமக்குக்கிடைத்தது.

நாம், அபிஷேகம் பெற்றதும், அடுத்துவரும் ஆடி மாசம் 2-ந் திகதியில் மாதாவுக்கு முடிசூட்டவேண்டுமெனத் தீர்மானித்திருந்தோம். அப்போது அப்போஸ்தொலிக்க ஸ்தானுபதி ஆண்டவரவர்கள் சமுகமாக முடியாதிருந்தமையால், கொழும்பு அதிமேற்றிராணியாராகிய அதிமிக வந். அந்தோனி கூடேர் ஆண்டவர் அவர்கள், தமது திருக்கரத்தால் மாதாவுக்கு முடிசூட்டலாயினர். அத்தருணம் ஐந்துமேற்றிராணிமாருட்பட இலங்கையடங்கலிலும் இந்தியாவிலுமிருந்துவந்த திரளான பக்தர்களின் கூட்டத்தைக் கண்ணுற்றவர்கள் இன்று மிகமகிழ்ச்சிகொள்ளுவார்கள். அந்த நாளிலேயே மடுப்பதியானது உலகிலுள்ள திருத்தாயாரின் யாத்திரைத்தலங்களுள் ஒன்றாக மதிக்கப்படும் தகுதியைப்பெற்றது.

புராதனகாலந்தொட்டு யாழ்ப்பாண மக்கள் மாதாபத்தியிற் சிறந்தவர்களென்று பெருமைகொள்ளக்கூடியவர்களாயிருந்துவந்திருக்கின்றனர். ஆகையினால் யாழ்ப்பாண மேற்றிராசனம் மரியாயின் ஸ்ரீதனம் என்று கூறப்படுவதற்கும் உரிமையுள்ளதாகின்றது. இவ்வருடம் நாம் இரட்டிப்புச் சந்தோஷம் அடையவேண்டியவர்களாகின்றோம். சென்றவருடம் நடந்தேறிய மகாமனந்திரும்புதலியக்கமானது இவ்வருடம் நடக்கவிருக்கும் முடிசூட்டு வெண்பொன் விழாவுக்கு ஒரு முன் ஆயத்தமாயிருந்தது. நமமைப்பொறுத்தவரையில், மடுத்தாயார் நமக்கு ஏராளமான கருணைகளையும் கொடைகளையும் தந்ததையிட்டு நாம் அவவின்போரால் சருவேசுரனுக்கு நன்றிகூறுகின்றோம்.

மேலும், இவ்வருடம் அமலோற்பவ பரித்தியாகிகள், மடுப்பதியின் பொறுப்பையேற்றுக்கொண்ட நூறும் வருடப் பூர்த்தியைக் கொண்டாடும் வருடம் என்பதையும் மறக்கலாகாது. 1849-ம் வருடம் அப்போது விக்கார் அப்போஸ்தொலிக்காரயிருந்த மிக வந். பெற்றக்கினி ஆண்டவர் அவர்கள், முதல் மடுப் பரிபாலனராக வண. சியாமின் சுவாமியாரை அனுப்பிவைத்தார்.

ஈற்றில், நாம், மேலும்மேலும் செபமாலைப்பத்தியில் வளர்ந்து, நமது மாதாவை மகிமைப்படுத்துவோமாக. செபமாலையும் கையுமாக நின்று தாயாரைப் பார்த்து — பரிசுத்த பாப்பரசர் பன்னிரண்டாம் பத்திநாதருக்கு—சருவேசுரனின் தேற்றரவும் வழிநடத்துதலும் கிடைக்கும்படியும், உலகில் ஒற்றுமையும் சமாதானமும் நிலவும்படியும் இராச்சியங்களினும் ஆள்பவர்களிடத்திலும் தேவனைப்பற்றிய உண்மையான அறிவு பரவும்படியும், தேவகற்பனைப் படியும், தேவநாமத்தின் மகிமைக்காகவும், ஆத்தும ஈடேற்றத்துக்காகவும் மனிதனுடைய உள்ளரங்க, வெளியரங்கசீவியம் நடைபெறவேண்டுமென்றும் பிரார்த்திப்போமாக.

இது, மடுத்திருப்பதியில் சம்பேதுரு பாவிலு அப்போஸ்தலர் திருநாளாகிய இன்று விடுவிக்கப்பட்டது.

✠ J. A. கியோமார், O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்
1949-ம் ஆண்டு ஆனி 29-ந் திகதி.

## மடுத்தாயாரின் மகுடதாரண வெள்ளி விழா

1949-ம் ஆண்டு, ஆடி மாதம் 2-ந் திகதி வருகிறசனிக்கிழமை. காடிபுலிவாழும் கானகத்தூடே எழுந்தருளியிருந்து கருணைமழை பொழிந்துவருகின்ற மடுமாதாவின் திருப்பதியிலே நடந்தேறும் மகாவைபவமானது இலங்கைச்சரித்திரத்திலேயே முதன்மையானதும் கண்ணிய மிக்கதுமான ஒரு சம்பவமாகும். எங்கள் மருதமடுத் திருப்பதியின் சரித்திரமானது பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பாகம்மட்டாய்ச் செல்லுகின்றது.

இத்தனை வருடகாலமாக இத்திருப்பதியில் நடந்தேறிய பற்பல வைபவங்களால், இவ்விலங்கைத்தீவில் பரலோக இராக்கினிக்கெனப் பிரதிட்டை பண்ணப்பட்ட எல்லா ஆலயங்களிலும் இத்திருப்பதியாலயம் அதிகம் மேன்மைவாய்ந்ததாகின்றது.

மருதமடுப்பதியில் கோயில் கொண்டிருக்கும் செபமாலை மாதாவின் திருச் சுரூபமானது,- பதித, ஒல்லாந்தரின் கொடுங்கோலுக்கஞ்சிக் கண்டியரசனின் ஆதீனத்துளடங்கிய காடுகளில் ஒளித்தோடி, ஒதுங்கிய சிறுதொகைக் கிறீஸ்தவர்கள் தம்முடன்கொண்டு சென்ற அதே திருச்சுரூபந்தான். காடுகளின் மத்தியில் துன்பதுரிதங்கள், பசிபட்டினி முதலான பற்பல சஞ்சலங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்த விசுவாசிகளுக்கு—நம்பிக்கையும், ஆறுதலும் தேறுதலுமாயிருந்த திருச்சுரூபம். மடுப்பதிக்குச் செல்லும் கிறீஸ்தவர்களுக்குப் பலவகைப்பட்ட இகலோக—பரலோக—நன்மைகளைப் பொழிந்தருளும்படி, சருவேசுரன்கருவியாய்க் கொண்ட திருச்சுரூபம். ஆண்டாண்டுதோறும் ஆயிரம், பதினயிரம் யாத்திரிகளை கத்தோலிக்கர்மாத்திரமல்ல, புத்தர், சைவர்மகமதியர்,பதிதர், ஆதியபலபுறசமயத்தவர்களைத்தானும் தனது திருப்பாதத்தண்டை கவர்ந்திழுப்பதாகிய காருண்யமிக்க சுரூபம். சுமார் மூன்னூறு வருடங்களின்முன் இச்சுரூபத்தை வைத்து வணங்க, கானகத்தில் பிரமாண்டமான ஆலயமிருக்கவில்லை. அதைச்சூழவா, தேவதோத்திரகீதங்களைப்பாடி அஞ்சலிசெய்ய—குருக்கள், சந்நியாசிகள் கூட்டம் அந்தக் காட்டில்வந்து கூடவுமில்லை. திருச்சுரூபம்மறைவாய் வைக்கப்பட்ட இடத்தை யறிந்திருந்த ஒருசிலரே அவ்விடம் ஒளித்துவந்து, தங்கள் துன்பதுரிதங்களை அத்திருச்சுரூபத்தின் பாதத்தண்டையிற் சொல்லி ஆறுதலடைந்துபோவார்கள்.



மருதமடுச் சேபமாலைநாயகி
திருச்சுருபத்தின் உண்மைச் சாயல்

## சமர்ப்பணம்

**ஆச்சீ! அம்மணீ !**

உமது தாசரைக் கிருபைக்கொண்டு பாரும்
எம்மேல் அன்பு கூரும்
உமது திருச்சுதனைக் கோரும்
எம் இடரைத் தீரும்
எமக்குத் தேவையானவைகளைத் தாரும்
சகல சங்கடங்களிலும் எம்மைக் காரும்
எம் அயலவரை உமது சுதனிடம் சேரும்
எம் இல்லங்கட் கரசியாய் வாரும்.

**வாழி !**

வாழி திருச்சபையும் மங்காத பாப்பரசர்
தாழ் வறுமேற் றிராணியர்கள் தக்கநற்சங் யாசர்களும்
குருக்கள் துறவோர்கள் கோதில்லாக் கன்னியர்கள்
அருட்பிர சாதமலி ஆசிரிய ரானவரும்
எல்லாருமே செழிக்க இடர்பிணி யெல்லா மொழிக்க
நல்லமழை பொழிய நாடெங்குஞ் செல்வமுற
பஞ்சம் படை யகலப் பத்தியெங்குமே பலுக
அஞ்சு காயன் சலுகை அனைவர் மேலுமருள
செய்முயற்சி களோங்க தீயமிடி விட்டகல
துய்யமரித் தாயாரின் துலங்கு செபமாலை
செபிப்போர் மோலோங்கச் சனர்கள்வர்த்தித்தேபலுக
அருட் சத்ய வேதமெங்கும் அணியாகவே படர
அன்னை செப மாலையம்மாள் அருளிரக்கந் தங்கியெம்மில்
என்னுளுமே வாழ்க! வாழி! மிக வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்திலே, வேதகலாபனை என்ற இருள்மேகமானது இலங்கைத் திருச்சபைமுழுவதையும்வந்து மூடிக்கொண்டிருந்தது. இலங்கைத் திருச்சபையானது, — அழிந்தேபோய்விடும். மீட்சியில்லாது என்றென்றைக்கும் அழிந்தேவிடும்—என வேதவிரோதிகள் எண்ணிமனப்பால் குடித்திருந்தார்கள். ஆனால், இன்றைக்கோ அதே திருச்சுரூபம் இலங்கைத் திருச்சபை முழுவதற்கும் இராக்கினியென்ன ஒரு அலங்கார சிங்கார ஆலயத்தில் பிரசித்தஎழுந்தேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. இத்திருச்சுரூபத்துக்கே —1924-ம் ஆண்டில்—பாப்பரசரின்பிரதிநிதியாகிய கொழும்பு அதிமேற்றிராணியார் அவர்கள்—வேறும் நான்கு மேற்றிராணிமாரும், அரைநூற்றுக்கதிகமான குருக்களும், இலங்கையின் மூலைமுடுக்குகள் எங்கணுமிருந்துவந்து குழுமிய ஒன்றரைலட்சத்துக்குமேற்பட்ட விசுவாசிகளும், இந்தக்கானகத்தில் வந்துகூடி அஞ்சலிசெய்து நிற்க —பாப்பரசரின் நாமத்தால்—தாயின் சுரூபத்துக்குத் திருமுடிசூட்டியருளினர். பாப்பரசரும் இப்படியான ஒரு சுதந்தரத்தை அருளுவது புதுமையுள்ள சுரூபம் எனத்திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட திருச்சுரூபங்களுக்கே யாம். இதனால் மருதமடுத் திருப்பதிக்குண்டான புகழும், மகிமையும் மிகவும் பெரிது! பெரிது!! இத்தகைய பெரியதோர் சுதந்தரம் கீழ்த்திசையிலுள்ள எத்திருப்பதிக்காவது இதுகாலும் கிடைத்ததேயில்லை.

மடுத்திருப்பதியானது கிறீஸ்தஉலகிலுள்ள தேவதாயாரின் அனுக்கிரகம் பொழியும்—திருச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட—பிரபல யாத்திரைத்தலங்களுள் ஒன்ருகப் பிரகடனம்செய்யப்பட்டு ஒருகால் நூற்ருண்டு பூர்த்தியடைந்துவிட்டது. இப்பூர்த்திவிழாவே இம்முறை திருப்பதியில் கொண்டாடப்படுகிறது. இத்திருப்பதி சம்பந்தமாக நிகழ்ந்த—மங்கா ஞாபகத்துக்குரியசம்பவம் சென்றஆண்டு நடந்தேறிய "மரியாயின் மிஷன்" எனப்பட்ட மகா மனந்திரும்புதல்இயக்கமாகும். மருதமடுச்செபமாலை நாயகிதான் உள்ளபடி இலங்கையின் இரட்சாநாயகி என்ற பட்டத்துக்கு உரித்தாளி. முன்திருச்சபையின் சத்துராதிகளால் நம் முன்னோர் உபத்திரவங்களை அகற்றஅவர்களின் விசுவாசவெளிச்சம் நூர்ந்துபோகாதபடி பாதுகாத்து வந்ததும், நற்காலம் பிறந்தபோது எங்கள் முன்னோர் காட்டைவிட்டுத்தம் சொந்தநாடுகளிற் சென்று இருந்தபோது அவர்களின் வேதவிசுவாசம் வீறுகொண்டு எரியும்படி செய்ததும், மருதமடுத்திருத்தாயார்தான்.

நம்முன்னேருக்குச்செய்த நன்மைகளைத் தொடர்ந்துசெய்வதற்கு, தமது சொந்தமக்களான குருக்களை—மாசில்லா உற்பவக்கொடியின்கீழ் ஞான யுத்தம்புரியும் அமலோற்பவசபைக் குருக்களை—எங்கள் மத்தியில் அனுப்பி எம் விசுவாசத்தைப் பாதுகாக்கும்படி செய்ததும் இத்திருத்தாயார்தான். எங்கள் ஆலயங்கள் கத்தோலிக்க ஸ்தாபனங்கள், பாடசாலைகள், சந்நியாச, கன்னியர் மடங்களெல்லாம் இத்திருத்தாயாரின் தொண்டர்களால்வந்த நற்பயன்களல்லவா? இத்துணை மகிமையும், எமக்குப் பெருமையுமுள்ள இவ்வித நலன்களெல்லாம் நம்மத்தியில் நிகழும்படி கருணைகொண்டதேவன், மாதாவின் திருக்கரங்களால் முன்னிலும் அதிகமான வரப்பிரசாதங்களை எம் இலங்கைத்தீவெங்கும் பொழிந்தருள மாட்டாரா? இந்த முடிசூட்டு யூபிலிக் கொண்டாட்டமானது இம்முறை ஞானகண்ணியமாய் நடைபெற இருக்கின்றது. இந்த வைபவத்தில் நாம் தாயாரிடம் எதைஇரந்துகேட்போம். தாயாரிடம்கேட்ட உதவிசகாயங்கள் எப்போதாவது வீணுயிற்றென எவராவது சொல்லக்கேள்விப்படவில்லையே! இப்படியிருக்கையில் நமது நாட்டுக்கு உண்டான இடர்களுளெல்லாம் பெரிய இடரும், துக்கங்களுளெல்லாம் பெருந்துக்கமுமான— நமது நாட்டாரெல்லோரும் மனந்திரும்பிச் சத்தியமறையிற்சேர்ந்துகொள்ளும் விஷயத்தில்—மாதா தமது விசேஷஇரக்கப்பெருக்கத்தைக் காட்டியருளவேண்டுமென்று இந்தவைபவத்தில் பிரார்த்திப்போமாக.

மடுத்தாயாரின் அன்பு இலங்கைமுழுவதிலும் பெருகப் பெருக!

சகலவிததீயஅனர்த்தங்களும் அருக அருக!—அறவே அழிந்து ஒழிக!

அன்னையின் அருள் அனைவரிலும் மாரிமழையென்னப் பொழிக! பொழிக!!

மடுவன்னையே வாழி! வாழி!!

## யப்பானில் அர்ச். சவேரியாரின் நான்காவது நூற்ருண்டு விழா

இன்று, அகில உலகக் கத்தோலிக்கரும் யப்பான்தேசத்தையே நோக்கிக்கொண்டிருக்கின்றனர்.

ஏன்? உலகம் முழுவதுமே யப்பான்தேசத்தில் நடந்தேறும் கத்தோலிக்க சமயப் பெருவிழாவை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது.

சத்தியசமயமாகிய கத்தோலிக்கமறை பரவாத எந்தத்தேசமும் உலகில் இல்லவேயில்லை. எம் சத்திய ஒளியைக் கண்டடையாத எச்சாதிமக்களாவது இவ்வுலகில் எங்காவது இல்லை. உலகில் அறியப்பட்டுள்ள எல்லாப் பாஷைகளையும் பேசுபவர்கள் எல்லோரிடையேயும் எம் சற்சமயம் வேரூன்றியுள்ளது. இதனால் உலகம் முழுதும் எம்சமயம்பரவியுள்ளது என்று துணிந்து கூறலாம்.

உலகிலுள்ள எல்லாத் தேசத்தவர்களும், எல்லாச்சாதியினரும் யப்பானில் நடந்தேறும் கத்தோலிக்கசமயப் பெருவிழாவை நோக்கியவண்ணமாயிருப்பதற்குக் காரணந்தானென்ன? சிந்துதேசத்தின் அப்போஸ்தலராகிய அர்ச். சவேரியார் யப்பான்தேசம்சென்று அங்கும் யேசுவின் திவ்வியவேதத்தைப் பிரசங்கித்தனர். அங்கு அர்ச் சவேரியார் வேதம் போதித்து இன்றைக்கு 400 வருடங்கள் சென்றுவிட்டன.

இந்தநாலாம்நூற்ருண்டுமுடிவு ஞாபகமானது யப்பானில்மாபெரும் சமயத்திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. ஒரு பெரிய—தேசீய--வைபவப் பெருவிழாப்போன்று மிகு அட்டோலிக்கமாக இச்சமயப் பெருவிழா கொண்டாடப்படுகின்றது. இந்தச்சமயப் பெருவிழாவுக்கு யப்பானிய அரசாங்கம் எல்லா ஒத்தாசைகளையும் செய்துதந்ததானது—அங்கு எச்சமயம் எவ்வளவு மதிக்கப்படுகிறதென்பதைக் காட்டுகின்றது.

யப்பானிய தேசத்திலுள்ள சனத்தொகை எட்டுக்கோடி



கொழும்பு அதிமேற்றிராணியார்
அதிமிசவந். தோமஸ் கூறே O. M. I.
ஆண்டவர் அவர்கள்

யாகும். இவர்களில் இப்போது இரண்டுலட்சம்பேர் மாத்திரம் கத்தோலிக்கராயிருக்கின்றனர்.

பழைய பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதில் பிடிவாதமுள்ளவர்களாகிய யப்பானிய மக்களிடையே இவ்வளவு கத்தோலிக்கர்கள் இருப்பது மிகமிக வியப்படையக் கூடியதொன்ருகும்.

யப்பானிய மக்கள் சாதாரணமாக 'சிண்டோ' எனப்படும் மதக்கொள்கையை அனுசரித்து வருபவர்கள். தம்முன்னோரை வணக்கஞ்செய்வதில் தடித்த பயிற்சியுள்ளவர்கள். சூரியன், சந்திரன் முதலியசிருஷ்டிகளையும் கடவுளர்களாக மதித்து வணங்குவதிலும் பிரீதியுள்ளவர்கள். யப்பானிய அரசர்களெல்லோரும்தெய்வப் பிறவிகளென்று நம்பி அவர்களுக்கு மேலான வணக்கஞ் செலுத்தும் கொள்கையுடையவர்கள். பழைமைப் பழக்கவழக்கங்களையும், சட்டதிட்டங்களையும் உயிரினும் மேலாக மதித்துப் போற்றுபவர்கள். தம் பரம்பரைக் கொள்கைகளுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் எவ்வித குந்தகமும் ஏற்படாமல் விழிப்பாய் இருப்பவர்கள். இப்படியான பண்புகளைக்கொண்ட யப்பானியரிடையேயும் எம் சத்தியவேதம் வேரூன்றிப் பலிதமடைந்து வருவதையிட்டு எவர்தான் ஆச்சரியப்படாமலிருக்க முடியும்.

கடந்தயுத்தத்தில் யப்பான் தோல்வியுற்றமையானது அதை சகலதுறைகளிலும் மாறுதல் அடையச் செய்வதாயிற்று. யப்பானிய அயற்தேசங்களுக்கு யுத்தம்புரியச் சென்ற யப்பானியப் போர்வீரரும், மேலைத்தேசங்களுக்கு யுத்தகைதிகளாகச்சென்றவர்களும் அங்கங்குள்ள கத்தோலிக்க கோவில்கள், பாடசாலைகள், தர்மஸ்தாபனங்கள் இவைகளையும். கத்தோலிக்கமக்களின் வழக்கங்கள், பண்புகள், நாகரீக நிலைமைகளையும் கண்கூடாய்க்கண்டுவியப்படைந்துள்ளனர்.



சலாப மேற்றிராணியார்
மிகவந். எட்மன்ட்பீரிஸ் O. M. I.
ஆண்டவர் அவர்கள்

தற்பொழுதுயப்பானில் காவல் புரிந்துவருபவர்களில் அதிகமானோரான கத்தோலிக்க அமெரிக்க இராணுவத்தாரின் சமயப்பற்றையும், வேத கைங்கிரியங்களையும் கவனித்து, யப்பான்தேச வாசிகள் எம்சத்தியமறையின்மீது மதிப்புங் கணிப்புங்கொண்டிருக்கின்றனர்.

### விசேஷ வெகுமதி

பிரபல குற்றவாளியான தர்மதாசாவை அகப்படுத்தித் துப்பாக்கியால் சுட்டுவீழ்த்திய மூன்று பொலிசருக்கும் மற்றும் மூவருக்கும் தற்காலிக பொலிஸ் இன்ஸ்பெக்றர்ஜெனறல் கப்ரின் டபிள்யு. ரி. பிறிண்ட்லி சமீபத்தில் விசேஷவெகுமதிகள் அளித்தார். இப்பரிசளிப்புவிழா கொழும்பு மேற்குப் பொலிஸ் காரியாலயத்தில் பெருஞ்சனத்திரள் கொண்ட சபையில் நிகழ்ந்தது. திரு. பி. ஸி. விஜயமானே என்பவர் ஏ.எஸ்.பி. ஆகப்பதவி யேற்றம் பெற்றதோடு 750 ரூபா வெகுமதியும்பெற்ருர். 4073 இலக்கமுள்ள பி. ஸி. பெர்னுண்டோ என்பவர் 'பி' வகுப்புக்கு பதவியேற்றம் பெற்றதோடு 150 ரூபா வெகுமதியும் அளிக்கப்பெற்ருர். கருணுரத்னஎன்பவர் 'பி' வகுப்புக்குப் பதவியேற்றமும் 150 ரூபா பரிசும் பெற்ருர். தர்மதாசாவைக் கண்டுபிடிப்பதற்கு முன் அறிவிக்கப்பட்ட 2,000 ரூபா வெகுமதியை ஆர். எம். அப்புஹாமி, புஞ்சி பண்டா, டபிள்யு. எம். அப்புஹாமி ஆகிய மூவரும் முறையே 850 ரூபா, 850 ரூபா, 300 ரூபாயாகப் பெற்றனர்.

### அதிஷ்டச்சீட்டு

ஐரிஸ் ஆஸ்பத்திரி அதிஷ்ட லாபச்சீட்டு நடைபெறும் முறையில் இலங்கையிலும் ஓர் அதிஷ்டலாபச்சீட்டை அரசாங்கத்தார் நடத்தவேண்டுமென ஆலோசிக்கிருர்கள். இதில் சேரும் பணம் நாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக்காகச் செலவழிக்கப்படும். இது விஷயம் அரசாங்க பாராளுமன்றக் கட்சியினால் விவாதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. வைத்தியசுகாதாரப் பகுதித் தலைவரே இதற்கான ஓர் திட்டத்தைத் தயாரிக்கும்படி மந்திரி நியமித்திருக்கிருர். 1941-ம் ஆண்டில் இவ்விஷயம் அரசாங்கசபையில் காலஞ்சென்ற திரு. ஆர். சி. கன்னங்காரவினுல் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. $2\frac{1}{2}$ வருடங்களின்பின் உள்நாட்டு நிர்வாகசபையினுல் இது பரிசீலனை செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதி வைபவம்

கலித்துறை

அருட்பிரசாதி செபமாலைத்தாய ரனேகநன்மை
இருட்பவம் நீக்கி யெமக்கருள்வாரவ ரின்புதுமை
மருக்கடலிந்த உலகெங்கும் பாயும் மருதமடுத்
திருப்பதி வைபவ மானதை யானிங்கு செப்புவனே.

அம்மானை

எல்லோனுடையு மீராறு மீன்முடியும்
வல்லமதிப்பதமும் வடிவலங்காரந்துலங்கத்
திருமருத மாமடுவிற் சேயரெமக்கேகிதமும்
அருண்மாரியைப்பொழிய அற்புதமாய் வந்தெழுந்த
செபமாலைத் தாயாரின் திருப்பதியின் வைபவத்தை
உவமானமாயெடுத்து ஓதிடுவேன் கேட்டருளும்
ஓராயிரத் [illegible]தஞ்னூற் றொருபதினெட் டாண்டுதொட்டு
ஓராயிரத்[illegible]றுநூற் றேரைம்பத் தெட்டாண்டு
ஈறுமட்டுமிந்த [illegible]இலங்கா துவீபமதில்
தேறவர சாட்சி செய்தபோர்த் துக்கீசர்
தம்முடைய காலமட்டுந் தழைத்தசத்திய வேதமதை
யமன்போலழித்துவிட எழுந்துநின்ற ஒல்லாந்தர்
தம்மாற் கிறீஸ்தவர்கள் தமக்குவந்த விக்கினங்கள்
இம்மாத் திரமதென் றெடுத்துரைக்குந் தன்மையல்ல



மிகவந். யூலன் O. M. I. மேற்றிராணியார் அவர்கள்
1883—1918

கல்வீன் மதத்தைக் கருதிநின்ற ஒல்லாந்தன்
பொல்லாத துஷ்டன் புழுங்குமன வேகமுடன்
அன்னுட் கிறீஸ்தவர்க ளானவர்கள் பிள்ளைகளை
தன்னுள்கைக் குட்பட்ட தப்பறையும் பதித
பாடசாலைக்கனுப்பப் படல்வேண்டு மென்று மின்னும்
வாடாத சுத்தசத்திய மறையின் விசுவாசர்
தம்முடைய வேதகொள்கை சகலதையு மேவிடுத்துச்
செம்மையாய்த் தன்மறையிற் சேர்ந்தெல் லோருமொருங்கு
வாழ்ந்திடவே வேணுமென்றும் வன்கொடிய கட்டளையை
தேர்ந்தவனு மேவிடுத்துச் செபஆல யங்களையும்
இடித்துத் தகர்த்தெறிந்து ஏற்றசுரூபங்களையும்
அடித்துடைத் தெறிந்துமிக அனுசாரஞ்செய்துவந்தான்
இன்னுந்தன் கட்டளைக்கு ஏற்காமலேநடக்கும்
நன்மைக் கிறீஸ்தவர்க்கு நவிலரிய வாதைசெய்து
கொலைத்தீர்வை செய்துங் கொடுஞ்சிறையிலேயடைத்தும்
நலத்தோடிருந்தபதி நாடுகள் தமைவிடுத்தும்
துரத்திக் கொடுங்கோன்மைத் துரைத்தனத்தையேபுரிந்து
இரக்கமின்றி யாளுகையை யியற்றிவரு மக்காலம்
இக்கொடுமைக்காற்ற தெழுந்துமன்னூர்த் தீவினெடு
மிக்கவரும் மாதோட்ட மீதுறுங் கிறீஸ்தவர்கள்
சண்டாள ஒல்லாந்தன் றனது நெருக்கிடைக்கு
அன்றஞ்சி மாந்தை யப்பதித்தே வாலையத்தில்
உள்ளசெப மாலையம்மாள் உசித சுரூபமதை
விள்ளரிய பத்தி வேகமுடனே யெடுத்துக்
கொண்டு மறைவிடத்திற் குடிபுகுத வெண்ணமுற்று
அன்றுகண்டி ராசனுக் கடங்கிய மருதமடுக்
காட்டுப் பூமிதனையே கருதியடைந்தேவசித்துத்
தாட்சி மேலோங்கத் தழைத்துவருமப்போது
யாழ்ப்பாண மீதிருந்த எல்லாக் கிறீஸ்தவரும்
ஏற்றகுருமார்களுமா யேகோபித்தேகூடி
பூநகரி மார்க்கம் புறப்பட் டிருளடர்ந்த
கானகங்கள் தாண்டிக் கடைசியா யங்கவரும்
மருதமடுப்பதியை வந்தடைந்தே யெல்லாரும்
ஒருமனமாகக்கூடி உத்தமசர்வேசனுக்குத்
தோத்திரம் புரிந்து சுகமாக வாழ்ந்தார்கள்
பாத்திப னொல்லாந்தன் பழுதிடர் களுக்கஞ்சி
இங்கிது நிகழ்ந்த தேற்றவோ ராயிரத்துத்
தங்குமறு நூற்றெழுப தாண்டளவி லாமெனவே
கன்ன பாரம்பரியங் களறுகின்ற தன்னுளில்
வன்னி மருதமடு வாம்பதியில் வந்தொருங்கு
குடியேறியசனர்க்குக் குளிர்ச்சியந்தக் காடுதர
அடியவர்க்கமுதான அன்னைசெப மாலையம்மாள்
அடைக்கலத்திற் றங்களையே யவர்கள்தா மொப்படைத்து
திடத்துடன்வா ளன்னுளிற் செழித்த யாழ்ப்பாணநகர்
இருந்துவந்தோர் தங்களுக்குள் எலேனு ளெனும்நாமம்
பொருந்துமோ ருத்தமியாள் போர்த்துக்கீசர்மரபிற்
சேர்ந்தவளுந் தெய்வபத்தி சிறந்தவளு மானவளால்
வேந்தர்க்கு வேந்தன் விண்ணுள் பரன்சுதனைப்
பெற்ற செபமாலையம்மாள் பெயராலோ ராலயமும்
உத்தமி பொறுப்பி லுகந்துகட்டுப்பட்டதுவே
இக்காரணத்தையிட்டு எலேனு மருதமடு
அப்பதிக்குப் பூண்டதுவு மதுவும்நாள் வட்டமதிற்
திரிபடைந் திக்காலஞ் சிலேனு மருதமடு
அரியபதியென் றமையவே பெற்றதுவே
ஒருபொருளா மெம்பரனு மூகப்பா யடியருக்குத்
திருவுளமுற்றேயளித்த திருமறைக் கலாபனையின்
அருட்சி மும்முரந்தணிய வங்குகுடி யேறினவர்
ஒருத்தர் பலராக வொன்றுகூடிச்சேர்ந்து
பைய[illegible]ள்ளவாயப் பதியைவிட்டு ஊர்களுக்கு
ஐயமின்றிச் சென்று ரதன்பின் தேவாலயமும்
இடிகரையதாகிவிட ஏற்றவந்தச் சேதிமத்தின்
அடிநிலையந் தன்னையங் கமைக்கவே பெற்றிருந்த
மரக்குருசொன்றேகாட்டி வந்ததெனுந்திவ்ய
அருட்செப மாலையம்மா ளரிய திருப்பதியை
மறந்துபோகாமலின்னும் வானபரன் தாயாரின்
சிறந்த திருப்பதத்தைத் தேடியே தெண்டனிட்டு
வந்தார் விசுவாசர் மாதாவுமங்கவர்க்குச்
சந்தோஷமாகவே தமதருள்களைப் பொழிந்து
காப்பாற்றிவந்தா கருணைத் தயாபரியின்
ஏற்றகோவில்மருந்தா லினியநற்சு கங்களையும்
அருளிவந்தா விங்கவங்க ளறிந்தறிந் தித்தாயின்
திருமருத மாமடுவைத் தேடிவிசு வாசிகளும்
கணக்கின்றிப்போவதையே கண்டுமன்னார்ப்பட்டினத்தில்
இணக்கமாய் நீதிஸ்தல ஏற்றவுத்தி யோகமது
வகித்திருந்த மோயிஸ் வளர்பத்தி மானறிந்து
இகத்துளோ ரும்போற்ற வெழுந்தவோ ராயிரத்து



மிகவந். அன்ருறு புறே O. M. I. மேற்றிராணியார் அவர்கள்
1919—1924

எண்ணூற்றீர்பத்திமூன் றெனுமாண்டி லப்பதியில்
மண்ணுலோர் கோயில் வடிவாகவே யியற்றி
அப்பதியில் முன்னிருந்த அழகுசெப மாலையெனும்
கற்பாரணி சுரூபம் கள்ளியகட் டைக்காடு
எனுங்கிராமத் திருப்பதாய்க் கேள்வியுற்று
தன்மர் மோயிஸ்துரையுந் தாமேயெடுப் பித்ததை
இஸ்தாபித்துவிடவே யெறிசுடரொப் பவிளங்கி
உத்தம மருதமடு உலகோர் இடர்தீர்க்க
மோட்ச விருந்தாகி முதல்வி திருப்பதியும்
காட்சிநவத்தால்மேலுங் கதித்துவரலாகினதே
மண்ணு லியற்றியுள்ள மாதாவின்கோவிலதை
இன்னுமோ ராயிரத்தெண் ணூற்றுமுப்ப தாண்டதன்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடித்துப் பெருப்பித்து ஏற்ற மரத்தா லமைத்தோர்
படிக்கு நன்மைசெய்துவந்த பகரருங் கோவைக்குருவாம்
யுவாம் பிராஞ் சீஸ்கோவென் றுரைக்குஞ் சுவாமியவ
ரனமெனவறிந்துகொள்ளு மவனிதனிலுள்ளோரே
வருஷம்மூந்நூறுமட்டு மாகவே கொச்சிநகர்
அதிமேற்றிராசனத்து ளடங்குமிலங்கைத் தீவை
வேதவிருத்தியதை மேவியெம்திருச்சபையின்
ஆதிபர் பதினொரும் அமிர்த கிறகோரி
பாப்பரசர் தாமும் பகருமோ ராயிரத்து
எண்ணூற்று முப்பத்திநா லெனும்வருஷ மீதுகொச்சி
அதிமேற்றிராசனத்தா லதைப்பிரித்து நன்மைதிகழ்
விதமான வோர்புறம்பு விக்காரியமாக்கி
விட்டபோதே யெழுந்து விளைந்தசில மாற்றங்களை
யிட்டபிரிவினையி னேராவலை தனிலே
சிக்குண்டு பேதலித்த சிலகமண்ட லக்குடிகள்
தக்க மருதமடுத் தாயார் திருப்பதியைத்
தமது சொந்தமென்றுநின்று தாமவர்வா தாடினதால்,
எமதுதந்தை பெற்றக்கினி யெனுமாண்ட வர்காலம்
திருச்சபையுத் தியானமதிற் சிறந்தவிலங்காபுரியி
லுதித்த அமலோற்பவிநல் லுசிதநிருமரியை
நாயகிசபைக்குருக்கள் நன்முறைப்பிரகாரம்
தூயமருதமடுச் சுகிர்த செபமாலையம்மாள்
ஆலயந்தமக்கெனவே யவர்களுரித்தாடிவர
சீலமிகு பெற்றக்கினி திரு ஆண்டவர்தாமும்
இவ்வுலகைவிட்டு எம்பரனுரின் பாதஞ்
செவ்வையு டனேயடையச் செழிக்குமவரின் பதவிக்
காயிரத்தியெண்ணூற்றி யைம்பத்தேழாமாண்டி
லேயுயர்த்தப்பெற்ற விரக்க தயாளமிகும்



மிகவந். அருளப்ப கியோமார் O. M. I.
ஆண்டவர் அவர்கள்
1924—1949



முதற்தமிழ் ஆயர்
வந். J. எமிலியானுஸ்பிள்ளை O. M. I.
ஆண்டவர் அவர்கள்

ஆசாரத்துக்குரிய ஆண்டவர் சமேரியா
தேசிகமேற் றிராணியருஞ் செங்கோல் கரம்பிடித்து
விசுவாசர் ஆளுகையை ளளக்கிவரு மக்காலம்
திசையுள் ளோருமறியத் திருமருதமாமடுவை
இடட்வி.வா தங்களு பெழுந்தோர்வி யாச்சியமாய்
பட்டணமெங்குந்தெரியப் பகிரங்கமாய்நீதி
இஸ்தலத்துக் கேயேறி யேற்றுண்டோ ராயிரத்தோ
டுற்றவெண்ணூறே டெழுபத் தோரைந்திலே தீர்ந்து
அக்காலம யாழ்ப்பாணத் தருமேற்றிராணியரும்
மிக்ககல்விமானுமென வெங்கும் புகழடைந்த
தோன்றல்விசுவாசிகளைத் துயரமின்றிக் காத்துவந்த
ஆண்டவர் பொஞ்ஜீனவரி னட்சிக்குட் பட்டதுவே
இக்குரவர் நற்பெருமா னெனும்பொஞ்ஜீனண்டவருந்
தக்கமருதமடுத் தாயார் திருப்பதியின்
சிறுகோயிலைப்பெரிதாய்ச் செய்யவே ஆசைகொண்டு
மறுவற்ப மில்லாத மாதா உதவியினுல்
ஆயிரத்தியெண்ணூறே டமைந்தெழுபத் தீராண்டி
லேயுதித்த ஆவணியி னெட்டாந் திகதியன்று
அஸ்திபா ரக்கல்லை யருந்திருக் கரத்தாலே
வைத்தவரும் பின்பு மரியைசெப மாலையம்மாள்
திருச்சுரூபமதற்குச் சிங்கார வேலைசெய்த
அருட்தங்க மாமுடியை யலங்கார மாய்ச்சூட்டி
விட்டவரும் நன்மை மேவுதிருத் தாயாரின்
உத்தம திருநாளின் உசிதமுறுந் தினத்தை
ஆடிமதி ரெண்டினிலே யமைத்தவரு மிப்பெரிய
நாதனும் பொஞ்ஜீனெங்கள் நல்லாண்டவர்தாமே
இவருங் கொழும்புநகர்க் கேற்றதிமேற்றுணியராய்
நியமனமடைந்துசெல்ல நேராக வப்பதவிக்
குயர்த்தவேபட்டார் உகந்த மெலீசனெனுங்
தவத்திமேற் றுணியருந்தாமே யாழ்ப்பா ணத்துக்கு
இத்தகு சுகுணமுள்ள வினியமேற் றுணியரும்
உத்தம மிகுங்கொழும்புக் குகந்ததிமேற்றுணியராய்

சென்றிடவே யாழ்ப்பாணச் சிறந்தவிசுப்பாக
அன்றுதிரு யூலனெனு மாண்டவருதித்தனரே
இவர்காலந் தன்னில்மடு வேற்ற திருப்பதியில்
நலமாக வேலைகளும் நன்றாய் நடந்தேறி
அப்பதித் தலைவரெனும் அந்தோனிச் சுவாமியரின்
உத்தம பொறுப்பி லுகந்துமுற்றுப் பெற்றதுவே
இக்காலம் முற்கூறி யிருந்த பிரிவினைகள்
சற்றுக்குச் சற்றுத் தலைநிமிர்ந்து தள்ளாடி
பையமெள்ள விட்டுப் பறந்தவிதம் யாழ்ப்பாணத்
தெய்தியவஞ் ஞானிகளா லெழுந்தவிடை யூறுகளை
அடக்கித் திருச்சபையி லஞ்ஞானிகள் தமையே
திடத்துடனே சேர்த்துவருந் தேவதொண்டரான நல்ல
ஞானப்பிரகாசரெனும் நற்குருவுக் கொப்பாக
ஈன பிரிவினையா லிடறல்கொண்டோர் தங்களையே
நல்லவழிதிருப்பி நாட்டிவைத்த உத்தமராய்
துல்லிப சந்தியாகுச் சுவாமி யவ ரெனவே
இன்னுள்மட்டும்புகழ்ந் தியம்பிவா ரூர்கள்[illegible]த
மன்னர் மாதோட்டமதில் வீழுஞ் சென[illegible]தாமும்
இன்னும் திருயூல லென்னும் விசுப்பாமவர்பின்
நன்மைப் புரூதூய நற்றரும மேற் றிராணி
ஆண்டவரும் யாழ்ப்பாண மானதைவிட்டேபரிவாய்
மாண்டு பரலோகமுற மதிக்கு மவரின்பதவி
தனக்குக் கியோமாரெனும் தக்கவிசுப்பாண்டவரும்
அனைத்திற்கு மாதிகத்த னருட்தயவால் வந்தபின்னல்
செபமாலைத் தாயார்க்குத் திருயுபி லியும்நிகழ
நவரெத்தினத்தாலே நன்றாகவே யிழைத்த
அலங்கார மாமுடியை ஆயிரத்தோள்ளாயிரத்து
இலங்குமிரு பத்தேனுநா லெனுமாண் டிலே ஆடி
ஓரிரண்டாந் திகதி யுகந்த கொழும்புநகர்ச்
சீரதிப மேற்றிராணி செழிக்குமந் தோனிகுடேர்
ஆண்டவரு மெங்க ளரியபரி சுத்தபிதா
தோன்றலற்ப மாசுமின்றித் துலங்கு திருச்சபையின்
பதிலதிப ரானநல்ல பதினொராம் பாப்பரசர்
இதமுடனருளிநின்ற ஏற்றவுத்தா ரப்படியே
பலமேற்றி ராணியர்கள் பத்திமிகு நற்குருக்கள்
நலமிகும் விசுவாசர் நவிலருங் கணக்காக
கூடியே போற்றிசெய்யக் குழல்பாண்டு வாத்தியங்கள்
நாடித் தொனிமுழங்க நறைகமழ்பூங் கானகத்தில்
உள்ள மிருகபட்சி யோசைகொண்டு பாடியெங்கள்
தெள்ளமிர்தத் தாயாரின் திருயுபி[illegible] மாட்சிமையை
போற்றிப் புகழப் பூரணி திருச் சிரசில்
ஏற்ற மௌலிதனை யினிதுறவே சூட்டிவிட்டார்



நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசர் O. M. I. அவர்கள்

இந்த யுபிலிவருஷ மெழுந்தரிய வற்புதங்கள்
சந்தசெப மாலையம்மாள் தன்பதியில் மேவினதே
இத்தாயர் தன்யுபிலி யேற்றதினங் காணவென்று
பத்தியாய் வந்தசனர் பகலவொண்ணுதம்மானை
இப்படியா யெங்கள் லங்காரட்சை நாயகின்
ஒப்பில்லாப்பதிதான் ஓங்கிவரு நாளையிலே
வல்லதிருச்சபையும் கீழ்த்திசையி லுன்னதமாய்
நல்லதிருத்தலமாய் நயந்தேற்றுக் கொண்டதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சினிலே லூர்து எனும் புண்யபதி போன்றதுவாய்
பேரான இத்தாலிப் பெயரிய லொறற்றே பதியும்
போர்த்துக்கால் தேசமதில் போற்று பத்திமா பதியும்
போன்றிலங்கு வேறு திருத்தாயின் சீர்பதியும்
என்னுமிவை போன்று எங்கள் லங்கை நாட்டினிலே
வன்னிமடுப்பதியும் மாட்சிபெற்ற தம்மானே
அருளப்பர் என்னுநல்ல ஆண்டவ ராம் கியோமர்
திருநகராம் ரோமைத் திருப்பதிபோய்ப் பாப்பரசர்
அரியதரிசனையை ஆதரவாய்ப் பெறுந்தருணம்
பரிவாய் மடுப்பதியின் பயன்களெல்லாம் கேட்டறிந்து
நல்லதந்தை பாப்பரசர் செல்விநல்ல மடுத்தாய்க்கு
வல்லசெபமாலை யொன்றை நல்மனமா யீந்தனரே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஆனநாற்பத் தெட்டாண்டில்
தாயுடையமாதம் தனில் ஐந்தாம் தேதிதனில்
மடுத்தாயார் தம்முடைய மக்களையே பார்ப்பதற்காய்
விடுத்தேதம் நற்பதியை விருப்புடனே பவனியுடன்
யாழ்நகர்மேற் [illegible]சனத்தில் நாடுங் கிராமமெல்லாம்
வாழ்த்தித்துதி[illegible]டவே வந்துசென்ற எம்மானே
மனந்திருப்புத லியக்கம் மாறாத ஞாபகமாம்
வனத்தரசி தந்தசெப மாலைப்பத்தி ரவியதாம்
மங்காத கீர்த்தி மகிமைப் பிர தாபமுள்ள
துங்க மருதமடு துலங்கவழி செய்ததிரு
அமலோற் பவியின் அரியகுருக் களுடைய
சமயோசித சேவை சரித்திரத்தில் காணலாகும்
முதலிற் தமிழ் ஆயராக முந்திவந்த கோபாலன்
பதம் புகழு மெமிலியானுஸ் பார்த்திபனு மிவரும்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஆனநாற்பத் தொன்பதிலே
தாயின் முடிபுனைந்த தனிவெள்ளி யூபிலியாம்
மேற்றாணி மாரெழுவர் மேவியே வந்திடுவர்
நூற்றுக்கு மேலான நூற்குருக்கள் வந்திடுவர்
எண்ணுக்கடங்காத எங்கெங்குங் காணுதை
தொண்டர் திரள்திரளாய்த் தோத்திரிக்க வந்திடுவார்
செல்ல மடுப் பதியில் சொகுசுடனே வீற் றிருக்கும்
தொல்லை நீக்குந்தாயார் துயர் நீக்கித் துணைதருவார்
ஓர்தீங்கும் வாராமல் உத்தமிகாப் பாற்றிடுவார்
சீராக நம்பிடுவீர் செகத்திலுள்ள மானிடரே.


கே. ஆறுமுகம்பிள்ளை அன் சன்ஸ்,

ஸ்தா[illegible]தம்: 1900.

பிரபல நகை வியாபாரிகள்

64, கன்னதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.

வட இலங்கையில் பழைமையும், பெருமையும், பிரபலியமும் கொண்ட நகைத்தொழிற்சாலை இதுவாகும்.

தற்கால நவீன ரீதியில், வேண்டியமாதிரிகளில், உயர்தர முறையில், பூரண திருப்திதரும்வகையில் வேண்டியநகைகள் செய்து கொடுக்கப்படும்.

ஞாபகமிருக்கட்டும்: ஜப்பான்

K. A. கனகசபை,
உரிமையாளர்.

தந்தி விலாசம்: ஜப்பான்
நம். 118.


ருகமாவிலுள்ள

செவிடு, குருடு, ஊமைப்பிள்ளைகளின் உதவிக்காக

அர்ச். சூசையப்பர் கலாசாலையில்

## வருகிற ஆடி மாசம் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

# — கொடித்தினம் —

கொண்டாடப்படும்

நற்சுக பெலமுள்ள பிள்ளைகளைத் தேவன் உமக்குத் தந்தருளியதற்கு அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் சொல்லி ருகமாவிலுள்ள செவிடு, ஊமை, குருட்டுப்பிள்ளைகளைத் தாபரித்துப் படிப்பிக்கிறதற்கு உதவியாக நீர் ஓர் கொடியை வாங்க, அல்லது எவ்வளவு சிறுதொகையாயிருந்தாலும் ஓர் சிறுபண உதவியைப் புரியக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

J. B. கிறகறி சுவாமியார், O. M. I.
நிருவாக தலைவர்.

சந்த ஹூசியா ஆசனக்கோவில்,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு, 10-6-49.



பரிசுத்ததந்தை 11-ம் பத்திநாதர்

## இஸ்பிரித். திரு. பின்வரும் 4-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(லூக். 5: 1—11)

அக்காலத்தில் சனங்கள் சர்வேசுரனுடைய வாக்கியத்தைக் கேட்பதற்கு யேசுநாதரிடத்தில் நெருங்கி வந்தபோது, அவர் ஜெனெசரேத் என்னும் ஏரியின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்போது ஏரிக்கரையோரத்தில் இருந்த இரண்டு தோணிகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்களோ அவைகளினின்று இறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவைகளில் ஒன்றாகிய சீமோனுடைய தோணியில் அவர் ஏறிக்கொண்டு, கரைக்குச் சற்றுத் தூரத்தில் தள்ள அவரைக் கேட்டுக்கொண்டார். பின்பு அவர் உட்கார்ந்து, தோணியிலிருந்து சனங்களுக்குப் போதித்தார். அவர் போதித்து முடிந்தபின் சீமோனைநோக்கி: தோணியை ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோ; மீன்பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். சீமோன் அவருக்கு மறுமொழியாகப் போதகரே, இரவெல்லாம் நாங்கள் பிரயாசப்பட்டும், ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும், உமது வார்த்தையின்படியே வலையை வீசுவேன் என்றார். அப்படியே அவர்கள் செய்தபோது, ஏராளமான மச்சங்களை வளைத்துப் பிடித்தார்கள். அவர்களுடைய வலையோ அறுந்து போகிறதாயிருந்தது. அப்போது தங்களுக்கு உதவிசெய்ய வரும்பொருட்டு வேறுதோணியில் இருந்த கூட்டாளிகளுக்குச் சயிக்கினை காட்டினார்கள். அவர்களும் வந்து இரண்டு படகுகளையும் நிரப்பவே, இரண்டும் அமிழ்ந்துபோகிறதருவாயிலிருந்தன. இதைக்கண்டு சீமோன் இராயப்பர் யேசுநாதருடைய பாதங்களில் வீழ்ந்து: ஆண்டவரே, நான் பாவியான மனிதன். ஆகையால் என்னை விட்டகன்றுபோம் என்றார். ஏனெனில் அவரும் அவரோடு இருந்த சகலரும் தாங்கள் பிடித்த மீன்கள் திரளின் நிமித்தம் மிகுந்த பிரமிப்பு அடைந்திருந்தார்கள். சீமோனுடைய கூட்டாளிகளாயிருந்த செபதேயின் குமாரராகிய யாகப்பரும் அருளப்பரும் அவ்விதமே பிரமிப்புக்கொண்டிருந்தார்கள். யேசுநாதர் சீமோனை நோக்கி: நீ பயப்பட வேண்டாம்; இதுமுதல் நீ மனிதரைப் பிடிக்கிறவனயிருப்பாய் என்றார். அவர்கள் தோணிகளைக் கரையிற் சேர்த்தபின் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்சென்றார்கள். கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## அறிவித்தல்

மன்னார்த் தீவைச்சேர்ந்த தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி கோவிலில் பரதகுலக் கிறீஸ்தவர்கள் வழமைபோல ஆடிமாதம் 11-ம், 12-ம் திகதிகளில் அர்ச். சவேரியார் திருநாளைக் கொண்டாடுவார்கள்.

கட்டளைக்குரவர்.
பேசாலை.

## மருதமடுவில் ஆகாயவசனி

மருதமடுத்திருப்பதியில் நடந்தேறும் திருஆராதனைச் சடங்குகள், இம்முறை வானொலிமூலம் அஞ்சல்செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட இருக்கின்றன. கொழும்புவானொலிநிலையத்தார் ஏலவே மடுப்பதிசென்று வேண்டிய றேடியோ ஏற்பாடுகளைச்செய்து வைத்துள்ளனர். மடுப்பதி நிகழ்ச்சிகள் வானொலிமூலம் ஒலிபரப்பப்படுவது திருப்பதிச் சரித்திரத்தில் இதுவே முதல் முறையாகும். வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 7 மணியிலிருந்து 8 மணிவரையும் நடைபெற இருக்கும் மாலையாராதனை வைபவத்தின்போது கொழும்பு அதிமேற்றிராணியாராகிய அதிமிகவந். தோமஸ் குரே ஆண்டவர் அவர்களால் சொல்லப்படும் சிங்களப் பிரசங்கம் ஒலிபரப்பப்படும். அதிமேற்றிராணி ஆண்டவரால் வேஸ்பர்பாடப்பட்டு நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்படும். திருநாளாகிய சனிக்கிழமை காலை 7 மணியிலிருந்து நடைபெறும் வைபவங்களும் அஞ்சல்செய்யப்படும். யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய மிகவந். அருளப்ப கியோமார் ஆண்டவர் அவர்களால் ஆடம்பரபலிப்பூசை நடத்தப்படும். அவ்வேளை சொல்லப்படும் சிங்களப் பிரசங்கமும் அஞ்சல் செய்யப்படும். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் அதிவண. ரீ. எவ். லோங் சுவாமியார் அவர்கள் திருஆராதனை நிகழ்ச்சி அறிவிப்பாளராயிருப்பார்கள்.

## விளம்பரம்

வடமாகாண கிளிநொச்சி, 10-ம் வாய்க்கால் அரசாங்கக்கட்டிட வேலைக்கு நாலாயிரம் புசல் திறம் சூளைச்சுண்ணும்பு ஒப்படைக்க வடமாகாண உதவி அதிபர் 1949-ம் ஆண்டு ஆடிமாதம் 5-ந்திகதி 12 மணி வரைக்கும் விண்ணப்பபத்திரங்களைப் ற்றுக்கொள்வார்.

குறித்த விண்ணப்பபத்திரங்களை ரூபா இருபத்தைந்து (25/-) கச்சேரியில்கட்டி வடமாகாண ஏசண்டர் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பபத்திரமாக (ரெண்டர்) 1949-ம் ஆண்டு ஆடிமாதம் 2-ம் திகதி சனிக்கிழமை பகல் 12. மணிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். மறுவிபரங்கள் வடமாகாண உதவி ஏசண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## நியாயவாதிகளும் பலிபூசையும்


இலங்கையிலுள்ள கத்தோலிக்க, நீதிபதிகள், நியாயதுரந்தார், சமாதான நீதிபதிகள், எல்லோருக்காகவும் அவர்கள் குடும்பத்தினருக்காகவும், வருடாவருடம் விசேஷவிதமாய் ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகின்ற திருப்பலிப்பூசைக் கொண்டாட்டமானது இம்முறை வருகிற ஆடிமாதம் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு அதிமேற்றிராசனக் கோவிலில் நடைபெறும்.

கண்டி மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் பலிஒப்புக்கொடுப்பார்கள். பூசைமுடிவில் கொட்டாஞ்சேனையிலுள்ள கத்தோலிக்க வாலிபர் சங்க மண்டபத்தில் நியாயவாதிகளின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# "அரசி வரத்தடி"

## பத்திமாகிரி—பண்டத்தரிப்பு



பத்திமாகிரி ஆலயம்

இதுவரை பண்டத்தரிப்பிலே "இராசமுருக்கு" என்று அறியப்பட்டுத் தற்போது "பத்திமாகிரி" என்று நாமம் விளங்குவதான பதியிலே, நவமாய் எழுப்பப்பெற்ற ஆலயம் ஒன்று காட்சியளிக்கிறது. இலங்கையில் தமிழ் நாட்டுப்பாகங்களிலே, மாதாவின் திரு இருதயத்திற்கென்று ஒப்புக் கொடுக்கப்பட்ட முதல் ஆலயம் இதுவேயாகும். முதலாவது உலக யுத்தத்தின் மிகப் பயங்கரமான நாட்களாகிய 1917-ம் ஆண்டிலே, கத்தோலிக்க உலகம் முழுவதுமே பரலோக உதவிக்காகக் கையெடுத்துக் கொண்டிருந்தது. அக்காலத்தில் பரம இராக்கினியானவர் மனமிரங்கி, போர்த்துக்கால் தேசத்தில், லிஸ்பன் நகரில் இருந்து எழுபதுமைல் தூரத்தில் உள்ள பத்திமாபதியிலே, தங்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த லூசியா, பிரான்சீஸ், ஜசிந்தா என்ற மூன்று இடைச்சிறுவருக்குக் காட்சியளித்து, சமாதானம்—இரட்சணியம் என்பவற்றை அடையும் சாதனங்களாகச் செபம்—விசேஷமாகச் செபமாலை, தபம் என்னும் இரண்டையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று உலகத்துக்குக் கற்பிக்கும்படி கேட்டுக் கொண்டனர் அன்றோ! அவ்விதமே தற்போது நடந்த இரண்டாவது உலகமகாயுத்தத்தின் இறுதி



அரசி வரத்தடி

யிலும் தமது ஞான மக்களாகிய எமக்கு—இலங்கை வாசிகளாகிய எமக்கு அனேக காரியங்களைக் கற்பிக்க, இந்தப் பண்டத்தரிப்புப் பத்திமாகிரியின் சிறு ஆலயத்திலும் காட்சியளித்திருக்கிறார் போலவே ஊகிக்க வேண்டியிருக்கிறது.

பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் பத்துமைல் தூரத்திலிருக்கும் ஓர் அழகான கிராமம். சந்தை, தபாற்கந்தோர், வைத்தியசாலை, தமிழ்-ஆங்கிலபாடசாலைகள், கிராமச்சங்கம் இவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளதான ஓர் சீர்திருந்திய சிறு கிராமம். ஐந்து திசைகளில் இருந்துவரும் வீதிகள் இங்கு சந்திக்கின்றன. இவ்வீதிகளில் எந்நேரமும் ஓடிக்கொண்டிருக்கும் மோட்டோர் வண்டிகள், பஸ்வண்டிகளைக் காணக்கூடுமாயிருக்கும். இக்கிராமம் பல கத்தோலிக்க கிராமங்களின் மத்தியில் அமைந்திருப்பினும் இங்குள்ள கத்தோலிக்க மக்களின் தொகையை சுற்றுக் கிராமங்களோடு ஒப்பிடில் மிகக்குறைவென்றே கூறவேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்குச் செல்லும் இருவீதிகளும் சந்திக்கும் இடத்திலிருந்து சற்று உள்ளே இருவீதிகட்கும் இடையில், பண்டத்தரிப்பிலிருந்து சுமார் கால்மைல் தூரத்தில், பல கட்டுக்கதைகளையும் சரித்திரங்களையும் தன்னுள் அடக்கிய சிறிய திடர் ஒன்று இருக்கிறது. அத்திடரில் தான் எமது "இராசமுருக்கு" பழங்கதைகளை ஞாபகப்படுத்திக் கொண்டு நிற்கிறது. அதற்கு வயது ஏறக்குறைய ஐஞ்ஞூறு. இராசமுருக்கு என்பது பண்டைக்கால இராச அரண்மனைகளைச் சூழவுள்ள பெரிய தோட்டங்களில் காணப்படும் மரங்களில் ஒன்று. எனவே, இங்கு இராச அரண்மனை ஒன்று இருந்ததாக ஊகிக்க இடமுண்டு. மரத்தைச் சூழவுள்ள கற்களும் திடர்களும், இந்தக் காலங்கண்ட இராசமுருக்கும் இவ்விடத்தில் இராசாக்கள் மாளிகைகளைக் கட்டிச் சீவித்தனர் என்பதை வலியுறுத்துகின்றன. இவை அழிந்தபின் காலகதியில் இந்தஇடம் கவனிப்பாரற்றுக் கிலமாய் விட்டதுபோலும். எனினும் இவ்விடத்தைப் பற்றிய பல வதந்திகள் உலவி வராமல் இல்லை. இவ்விடத்தில் பண்டைய அரசர்களது அரண்மனைச் செல்வம் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும், அது பேய்பூதங்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறதென்றும், அதை எடுக்கவேண்டுமாயின் அதற்கேற்றதான பலிகொடுக்க வேண்டுமென்றும் இப்படியான பழங்கதைகள் பரம்பரையாக வழங்கி வந்தன.

அதுவுமன்றி, அம்மரம் பேய்பூதங்களின் குடியிருப்பென்றும், இராக்காலங்களில் அவை கூட்டங் கூட்டமாய்க் கூத்தாடுமென்றும் கூறப்பட்டது. இப்படியாக இந்த இடம், ஓர் பயங்கரத்துக்குரிய இடமாக இருந்தமையால், பிரயாணிகள் இராக்காலங்களில் மாத்திரமல்ல, பகற்காலங்களிலுமே அவ்வழியாற் செல்ல அஞ்சினர். ஆயின், பழைய இராசமுருக்கின் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ? இப்பயங்கர இராசமுருக்கடி ஓர் நாள் அரசிவரத்தடியாகும் என்று, யார்தான் இற்றைக்கு ஈரைந்து வருடங்களின் முன் எண்ணியிருத்தல் கூடும்?

மனுஷரால் வேண்டாமென்று தள்ளிவிடப்படும்—கவனியாமல் விடப்படும் இடங்களையே தேவதாயார் தெரிந்தெடுப்பது மிகவும் அதிசயிக்கத்தக்கது. அழகிய பல நகர்கள்—கிராமங்கள் அருகிருக்க அதைவிட்டு, லூர்துநகர்ச் சனங்களால் கைநெகிழ்ந்து விடப்பட்ட அந்த மசபியேல் கெபியிலேயே தேவதாயார் காட்சி அளிக்கின்றார். செம்மறியாடுகள் தானும் தேடாத "கறேயன்" என்னுமிடத்திலே அங்கிலோ சாக்சன் என்பவனுக்குக் காணப்படுகின்றார். தூரம் போவானேன். எம் நாட்டிற்றானும் கொடிய விலங்குகளின் உறைவிடமாக விளங்கிய மடுப்பதியில் கோவில்கொள்ளவில்லையா? சர்ப்பத்தின் தலையை நசுக்கியவளாகிய தேவதாய், சாத்தானும் அவன் கூட்டமும் அரசாண்ட இடங்களை வெற்றிகொள்கிறாள். பேய்ச்சடங்குகள் நிகழ்ந்தேறிய இடங்கள், தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவவின் மகிமையினால் சங்கிக்கப்படும் தலங்களாக மாற்றி அமைக்கப்படுகின்றன.

எனவே தேவதாயின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஆலயம் இங்கே அமைந்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தேவாதீனமாகவே இக்கோவிலின் தாபகராகிய வண. ஜெலாண்ட் O. M. I. சுவாமியார் இந்த இடத்தைத் தெரிவுசெய்தார். அவர் தமதுமேல் அதிகாரிகளுடன் ஆலோசித்து இவ்விடத்தை விலைக்கு வாங்கினார். பழைய இராசமுருக்கின் அயலில், மாசில்லாத மாதாவின் பரிசுத்த இருதயத்துக்கு ஒருசிறு ஆலயத்தை அமைக்கவேண்டுமென்று அவர் நெடுங்காலமாக எண்ணியிருந்த எண்ணம் கைகூடலாயிற்று. ஆலய வேலை தொடங்கியது. முன்னே வனாந்தரமாகக் காட்சியளித்த இராசமுருக்கின் பக்கங்கள் திடீரென மாற்றமடைந்தன. நாளாந்தம் வேலைசெய்வோரது ஆயுதங்களின் ஓசை கேட்கப்பட்டது. தமக்காக வேலைசெய்வோருக்கு மாதா உதவிபுரிகின்றாவன்றோ! சீக்கிரம் வேலை முடிவடைந்தது. 1945-ம ஆண்டு மார்கழி மாதம் 9-ம் தேதி சிறியகோவிலில் எல்லாம் ஆயத்தமாயிருந்தது. புதுக்கோவிலில் முதல் ஆசீர்வாதம்



பத்திமா மாதா

கொடுக்க, அமலோற்பவ மாதாவின் திருநாளுக்கு அடுத்தநாளாகிய மார்கழி மாதம் 9-ம் தேதி தெரிந்துகொள்ளப்பட்டது. குறித்தநாட் சாயந்தரம் சில்லாலையில் இருந்து, மாசில்லாத மாதாவின் இருதய சுரூபம் பண்டத்தரிப்பு வீதிவழியே, ஓர் பெரிய சுற்றுப்பிரகாரமாக புதுக்கோவிலை—பத்திமாகிரியை அடைந்தது. இவ்விடத்தில் ஓர் சிறு சம்பவம் கூறவேண்டும். சுற்றுப்பிரகாரம் நடைபெற்ற நாளுக்கு முதல்நாளும் அன்று இரவும் பெருமழை விடாது பெய்துகொண்டிருந்தது. செவ்வாய்க்கிழமை வரையும் மழை விடாது பெய்யும் என்று சனங்கள் பேசிக்கொண்டார்கள். ஞாயிற்றுக்கிழமை காலையும் நல்ல மழைபெய்தது. ஆனால், தேவதாய் தமது பிள்ளைகளை மறக்கவில்லை. அன்று பின்னேரம் மரியாயின் சேனைப் பிள்ளைகள் இருதய சுரூபத்தைப் பண்டத்தரிப்பு வீதிவழியே கொண்டு போனபோது நீலவானில் சூரியன் பிரகாசிக்கத் தொடங்கியது. நனைந்த பூமியின்மேல் புதிய நீர்த்துளி ஒன்றுதானும் விழவில்லை. மறுதினமாகிய 10-ந் தேதி ஆலயத்திலே முதற்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 1946-ம் ஆண்டு வைகாசி மாதம், 13-ம் திகதி ஆசீர்வதிக்கப்பட்ட, அழகும் வெண்மையும் உடைய தேவதாயின் சுரூபம் ஒன்று, இராசமுருக்கின் பக்கலில் கட்டி எழுப்பப்பட்ட கற்றூணின்மேல் ஸ்தாபிக்கப்படலாயிற்று. அச்சுரூபம் அவ்விதம் அமைந்திருப்பதானது தேவதாய் அந்த மரத்தின் கிளைகளை ஆட்சிசெய்வது போல் காட்சியளிக்கிறது. இவ்விதமாகப் பேய்பூதங்களின் சந்திப்பு இடமாகக் கருதப்பட்டு, மனுஷ சஞ்சாரமற்ற மிகப்பயங்கரமான இடமாக நின்ற இராசமுருக்கடி, சகலவகையான பயங்கரங்களும் அருவருப்புகளும் நீங்கப்பெற்று, பத்திமாபதியிலே மூன்று சிறுவர்களுக்குக் காட்சி அளித்த தேவதாயின், பாதத்தலமாக—நம்பிக்கை நிறைந்த பத்தியுள்ள ஆத்துமாக்கள் கூட்டங் கூட்டமாகத் திரண்டு செபம் செய்யும் அரசிவரத்தடியாக விளங்குகின்றது.

எனினும், காலங்கண்ட அந்தமரத்தின் பழைய அந்தஸ்தை நாம் மறந்துவிடுதல் கூடாது. அதன் பூர்வ நிலைமை மிக அருவருப்பானதாய் இருந்ததல்லவா? பேய்பூதங்களின் உறைவிடமாயிருந்ததல்லவா? மெய்யாகவே அது ஒரு பெரிய பாவியின் அந்தஸ்தை நிகர்த்திருந்தது.

அம்மரத்தின் சாயல் மக்கட்குப் பயங்கரத்தை விளைத்தது. அதன் நிழல் சோர்வை அகற்றுதற்குப் பதிலாக ஆத்துமாக்கட்குத் திடுக்காட்டத்தை உண்டுபண்ணியது. ஆனால் அந்தப் பாவி மரம், தனது பயங்கரத்துக்குரிய தன்மைகள் யாவையும் சட்டென இழந்துவிட்டது. பகலிலோ இரவிலோ அதனருகே செல்லத் தற்போது எவருமே அஞ்சுவதில்லை. இராக்காலங்களில் கூத்தாடிய அந்தப் பேய்க்கணங்கள் எங்கே? அக்கோழைகள் தற்போது எட்டாத் தூரத்திற் சென்று விட்டன. எங்ஙனம்? பத்திமா நாயகியின் வருகையினால்—அனுக்கிரகத்தினால் அல்லவா? ஆம். முதிர்ந்த மரம் பத்திமா நாயகியின் அரசாட்சி நம் தேசத்தில் மேலோங்குமாயின் பேய்க்கணங்கள் மேலும் மேலும் ஓட்டெடுக்கும். ஆத்துமங்கள் அதிக சுத்திகரமாகும். அங்ஙனமாயின் தேவ ஒளி இருதயங்களைப் பிரகாசிப்பிக்கும்.

இன்னும், இராசமுருக்கு வருஷந்தோறும் வைகாசிமாதத்திற்றான் புஷ்பிக்கிறதென்பதைப் பற்றிச் சிலர் அறியாதிருக்கக்கூடும். இப்பூக்கள் மிகவும் சிறியன. கீழேநின்று பார்த்தால் அவை கண்ணுக்குப் புலப்படுவது அபூர்வம். அப்படியாயிருப்பினும் அவை அதிக அருமையான வாசனை உடையன. இப்படிப்பட்ட சுகந்த பரிமள வாசனையை இயற்கையாகவே தன்னிடங் கொண்டுள்ள இந்த மரம், பழைய கூத்தாடிப் பேய்களுக்குச் சொந்தமாகாமல் எங்களுடைய திவ்விய கன்னிகைக்குச் சேர்ந்துவிட்டது எவ்வளவு சந்தோஷம். நல்லிருதயங்களை நிகர்த்ததான இந்த வாசனை எம் தேசத்தில் எங்கும் பரந்தாலோ!

ஓ! அழகிய இலங்காவே! உனது மரங்களில் ஒன்றுமாத்திரம் மாசில்லாத இருதயநாயகி பக்கமாகத் திரும்பிவிட்டாற் போதுமா? உனது எல்லைக்குள் இலட்சக்கணக்கான ஆத்துமாக்கள்—நல்ல இருதயங்கள் இருக்கின்றனவே. அந்த நல்ல இருதயங்களுக்கு இந்தக் காத்திரமான செய்தியை அறிவிப்பாயாக; பத்திமாபதியின் மரத்தின்மேல் தம்மைக் காண்பித்த திவ்விய கன்னிகையை அறிந்து, அவ அப்பதியில் கேட்டுக்கொண்ட செபம் (செபமாலை), தபம் ஆகிய வேண்டுதல்களுக்குச் செவிசாய்க்க வேண்டும் என்பதே, அந்தக் காத்திரமான செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளங் குழந்தை




அதன் பால் பங்கீட்டை எப்பொழுதும் விரும்புகிறது. ஆனால் சில குழந்தைகள் "சொகுசு" பிடித்தவர்களாக இருக்கும். அவர்களுக்குப் பால்மேல் விருப்பமிராது. அவர்களைத் திருப்திப்படுத்தவேண்டும். அவர்களுக்கு நேஸ்டோமோல்ட் கொடுத்துப் பாருங்கள். இரு தேக்கரண்டிகள் நிறைய நெஸ்டோமோல்ட் எடுத்து ஒரு கிளாஸ் பாலில் கரைத்து அவன் குடிப்பதைக் கவனியுங்கள். மிக விருப்பமுடன் குடித்துவிடுவதோடு, மறுமுறையும் சாப்பிடுவதற்கு எப்பொழுதும் ஆவலுடையவனாக இருப்பான்.

## நெஸ்டோமோல்ட்

என்பது நெஸில்ஸ் மோல்ட்டேட் மில்க்குக்கு கொடுக்கப்பட்ட புதுப் பெயர்.

எல்லா ஸ்டோர்களிலும் கூட்டுறவு பண்டகசாலைகளிலும் விற்பனைக்கு இருக்கிறது.


## விற்பனைக்கிருக்கின்றன

### மகாமனந்திரும்புதல் —— —— இயக்கப் பிரசங்கங்கள்

கடந்த வருடம் மருதமடுத் திருத்தாயார் தமதுபதியை விட்டு எழுந்தருளி, யாழ்ப்பாண மேற்றிராசனமெங்கும் பவனிசெய்தருளினவல்லவா? அப்பவனி வருகையானது மகாமனந்திரும்புதல் இயக்கம் என அறியப்பட்டது. இந்த மகாமனந்திரும்புதல் இயக்க சம்பந்தமாகவேண்டிய – நேர்த்தியான – பிரசங்கங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூல், காலஞ்சென்ற வண. எஸ். ஆசீர்வாதநாவலர் சுவாமியாராலியற்றப்பட்டது. வண. ஆசீர்வாதநாவலர் சுவாமியார் இயற்றிய நூலென்றால்—இதன் பெருமையை எடுத்துரைக்கவேண்டியதில்லை. எழுதுவதிலும் பிரசங்கிப்பதிலும் கைதேர்ந்தவராகிய இக்குருவானவர், பாவிகளின் மனந்திரும்புதலுக்காக எழுதிய பிரசங்கங்களை எவர்தான் வாசித்தறியாமலிருக்கலாம்? இப்பிரசங்கங்களை முறையாய், நிறைவாய் வாசித்து எந்தப் பாவியும் மனந்திரும்பாமல் இருக்கமுடியாது இதில், மெய்யான மனந்திரும்புதலுக்கு – செபமும, தபமும அவசியமென்பதை உறுத்திக்காட்டப்பட்டிருக்கிறது.

தபத்தைச் சார்ந்த விஷயங்கள், 4 பகுதிகளில் விபரமாகவும் விளப்பமாகவும் விபரிக்கப்பட்டிருக்கின்றன. தபத்துக்குத் துணைபுரியும் விஷயங்கள் இன்னும் 4 பிரிவுகளில் விளக்கப்பட்டிருக்கின்றன. செபத்தைச்சார்ந்த விஷயங்கள் எட்டுப் பிரிவுகளாக விபரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் விளக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு காரியத்தையும் எல்லாக் கத்தோலிக்கரும் ஊன்றிப் படிக்கவேண்டும்.

இப்புத்தகம் ஒவ்வொரு கத்தோலிக்கர் கையிலுமிருக்கவேண்டும். பாவத்தைவிட்டு விலகுவதற்கும், உத்தமதனததில் நிலைகொள்வதற்கும் அவசியமான விஷயங்களெல்லாம் இப்பிரசங்கங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. மாதாபத்தியுள்ளவர்களெல்லோரும் இப்புத்தகத்தை வாங்கிப் படியாதிருக்கமாட்டார்கள். தெளிவான–விளக்கமான–சாதாரணநடையில் நயமாக எழுதப்பட்டிருக்கிறது. எல்லோரும் இப்புத்தகத்தை வாங்கிப் படித்துப் பலனடையவேண்டும்.

விலை ரூபா **1-00**. தபாற்செலவு **30** சதம். தேவையானோர் பின்வரும் விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர், அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## சத்தியவேத பாதுகாவலன்

**Supplement to the Catholic Guardian**

வியாழக்கிழமைகளில் பிரசுரமாகும்

**கையொப்ப விகிதம்**

முற்பணமாகக் கட்டவேண்டும்

இலங்கை

| தமிழ் | | தமிழும், இங்கிலிசும் | |
|---|---|---|---|
| வருஷம் | 5-50 | வருஷம் | 10-50 |
| அரை வருஷம் | 3-00 | அரை வருஷம் | 5-50 |

மற்றும் தேசங்களுக்கு

| | | | |
|---|---|---|---|
| வருஷம் | 6-00 | வருஷம் | 11-00 |
| அரை வருஷம் | 3-25 | அரை வருஷம் | 5-75 |

விளம்பரங்களுக்கும், கையொப்பங்களுக்கும், மனேஜர் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் என்று எழுதவேண்டும்.

மற்றும் விஷயங்கள்பற்றி, பத்திராதிபருக்கு எழுதவேண்டும்.



## வேத புஸ்தகங்கள்

| | |
|---|---|
| சத்தியவேத சித்திரவிளக்கம் | 5-50 |
| யேசுநாதர் அன்பின் அரசர் | 2-00 |
| ஞானசமுத்திரம் | 7-50 |
| பங்கிராஸ்சரித்திரம் | 4-00 |
| மரியாயின் வல்லபம் | 2-75 |
| இல்லற உத்தியானம் | 2-75 |
| திக்கற்ற தையல் | 1-75 |
| கன்னி அல்போன்சா | -40 |

தாமஸ்ரோட்றீகோ அன்சன்ஸ்,
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.


## அர்ச். அந்தோனியார் கோவில் திருப்பணி நிதி

### புங்குடுதீவு

புங்குடுதீவு மேற்கிலே கோடியற்புதரான அர்ச். அந்தோனி முனீந்திரர் பேரால் நவமாகக் கட்டப்படவிருக்கின்ற புதியகோவில் திருப்பணிநிதிக்குத் தங்களாலியன்ற உதவிபுரியுமாறு அம்முனிவரின் பக்தகோடிகளை யெல்லாம் அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

S. P. ALFRED
கட்டளைக்குரு.


வாசிப்புப்பாட - பேச்சுப்பாட

## உபகரணங்கள்

கீழ்ப்பிரிவு மாணவர்களுக்கு வாசிப்புப்பாட உபகரணங்களாக 8½" × 5½" அளவில் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 'அ' தொடக்கம் 'வெள'. வரையும் மாணவர் படிக்கவேண்டிய எழுத்துக்கள் அடங்கிய 106 படங்கள் பல வர்ணங்களில் வரையப்பட்டும், சொற்களுக்கு அறியவேண்டிய எழுத்து சிவப்புநிறத்திலும், மற்றைய எழுத்துகள் ஊதாநிறத்திலும் பதிக்கப்பட்டும், பேச்சுப்பாட உபகரணங்களாக 13" × 8½" அளவில் 5 கதைகளைக் குறிக்கும் 20 படங்கள் பல வர்ணங்களில் வரையப்பட்டும விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. தேவையானவர்கள் நேரில் அல்லது V. P. P. மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ மாதிரி பார்க்க விரும்புபவர்களுக்கு இலவசமாக மாதிரிப்படம் அனுப்பப்படும்.

விலை விபரம்: வாசிப்புப்பாட உபகரணங்கள்
106-ம் விலை ரூபா **3-50**

பேச்சுப்பாட உபகரணப் படங்கள்
20-ம் விலை ரூபா **1-50**
(தபாற்கூலி சதம் 30)

Naranthanai,
R. C. Boy's,
Kayts.

**S. Aseervatham,**
TEACHER.


Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press. Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 30 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org